Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily தேசிய தினசரி

தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது சித்திரை 12 ஆம் நாள் துல்கஃதா 30 (25-4-63) வியாழக்கிழமை இதழ் 75

மாதர்களே
மாதவிடாய் சம்பந்தமான சகல கோளாறுகளுக்கும், 2 முதல் 3 மாதங்கள் வரை மாதவிடாய் தடைப்பட்டாலும் கூட நிவாரணம்பெற உடனே
மென்சோஸ்டிரோன்
மாத்திரையை உட்கொள்ளுங்கள்
இது ஓர் அசல் இங்கிலிஷ் உற்பத்தி
எல்லா வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.
விலை 7-50 தபாற்செலவு ச. 50
வி. பி. பி. கவனிக்கப்படும்.
மெட்ரோ ஏஜென்ஸி
325 1/1 நொறிஸ்ரோட், கொழும்பு-11

# செனட் சபையின் அவசரக் கூட்டம்

## பிரதமர் வேண்டுகோள் மீது 30-ம் திகதி நடைபெறும்

### "பொதுஜன முக்கியத்துவம் வாய்ந்த அலுவல்" காரணம்?

கொழும்பு, புதன்

செனட் சபையை அவசரமாகக் கூட்டும்படி பிரதமர் வேண்டுகோள் விடுத்திருக்கிருர். "அவசரமான பொதுஜன முக்கியத்துவம் வாய்ந்த அலுவல்" பற்றி விவாதிக்குமுகமாக சபைக் கூட்டத்தை நடத்துமாறு அவர் செனட் தலைவரைக் கேட்டுக்கொண்டிருக்கிருர். இதன்படி செனட்சபைத் தலைவர் திரு. ஸரத் விஜயசிங்கா, வருகிற 30 ம் திகதி செனட் சபையின் அவசரக்கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கிருர். இந்த அவசரக் கூட்டத்திற்கானகாரணங்கள், பல செனட்டர்களுக்கே தெரியவில்லை எனக் கூறப்படுகிறது.

## "வடக்கு கிழக்கில் நிர்வாக, நீதிமன்ற மொழி தமிழ்"

### எம். ஈ. பி. சமசமாஜ கட்சி இணக்கம்

கொழும்பு, புதன்

லங்கா சமசமாஜக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் ஒரு ஐக்கிய இடதுசாரி முன்னணியை அமைக்க இணங்கியுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்கவேண்டும் என சமசமாஜக் கட்சி இணங்கியுள்ளதாகத் தெரிகிறது. வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழ், நீதிமன்ற மொழியாகவும் இருக்கவேண்டும் எனவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை—இந்தியப் பிரச்னை இருநாடுகளும் இணங்கத்தக்கவகையிலும், நடைமுறை சாத்தியமானவகையிலும் துரிதமாகத் தீர்க்கப்பட வேண்டுமென லங்கா சமசமாஜக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் கருதுவதாகத் தெரிகிறது. இரு கட்சிகளும் தோட்டங்களையும், வெளிநாட்டு வங்கிகளையும் தேசியமயமாக்கவேண்டும் எனக் கருதுகின்றன.

## கூட்டாக மேதினவிழா இடதுசாரிகள் நடத்துவர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கம்யூனிஸ்ட்கட்சியும் லங்கா சமசமாஜக்கட்சியும் கூட்டாக மேதினவிழாவை கொண்டாடுவதென முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இரு கட்சிகளினதும் யாழ்ப்பாணக் கிளைகள் கூட்டாக மேதினவிழாவைக் கொண்டாடினாலும் இரு கட்சிகளினதும் ஊர்வலங்கள் தனித்தே நடைபெறலாமென அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் மேதினவிழா நடத்தப்படுமெனத் தெரிகிறது. சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சியினரின் யாழ்ப்பாணக் கிளைகள் செவ்வாய்க்கிழமை இரவு மேதினவிழா சம்பந்தமாக ஒரு உடன்பாடு செய்துகொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இரு கட்சிக் கிளைகளின் கூட்டத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைப்பது பற்றி கம்யூனிஸ்ட் கட்சியினர் கேட்டபோது கருத்துத் தெரிவிக்கும் நிலையில் தாம் இல்லை என சமசமாஜிகள் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

மேதின விழாக் கூட்டத்திற்கு லங்காசமசமாஜக்கட்சியின் யாழ்ப்பாணக் கிளைச் சங்கக் காரியதரிசி திரு. ஆர். ஆர். தர்மரத்னம் தலைமைவகிப்பார்.

## ஹிந்தி எதிர்ப்பு: 57 பேர் கைது

சென்னை, ஏப்ரல் 24

ஹிந்தியை எதிர்த்து மறியல் நடத்திய தமிழ் தேசீயக் கட்சியைச் சேர்ந்த 57 பேர் இன்று பிற்பகல் 1 மணிவரை கைது செய்யப்பட்டனர்.

## ரயில்-பஸ் மோதல் 7 பேர் கொல்லப்பட்டனர்

கொழும்பு, புதன்

கந்தானையில் ரயில் ஒன்றுடன் பஸ் மோதியதால் பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த ஏழு பிரயாணிகள் கொல்லப்பட்டனர்.

இன்று காலை நிகழ்ந்த இந்தப்பரிதாபசம்பவத்தில் 15பேர் காயமுற்றதாகவும் அறியப்படுகிறது.

காயமுற்ற பிரயாணிகள் ருகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பஸ் சாரதி கந்தானைப் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

இந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த மற்றோர் சாரதி விபத்து பற்றிக் குறிப்பிடுகையில், "சம்பவம் நடைபெறவிருந்த சமயம் 'ரயில் ரயில்' என நான் எச்சரித்து சப்தமிட்டேன். ஆனல் சாரதி இதை லட்சியம் செய்யாமல் பஸ்ஸை விரட்டிச் சென்ருர்." எனக் கூறினர்.

கொல்லப்பட்டவர்கள் ஒரு பெண்ணும், 2 ஆண்களும், 4 குழந்தைகளுமாவர். 48 வயதான ஜோய் ராமனதன், 35 வயதான பெல்ட்மான், 15 வயதான ரோஸ்மேரிகமலா, 28 வயதான டெவிஷியா அந்தனி 58 வயதான ஜோஸப் அந்தனி, 8 வயதான புஷ்பகுமாரி சமரநாயகா ஆகியோரே அவர்கள்.

## மாஸே-துங் அலிசாப்ரி சந்திப்பு

பீகிங், ஏப்ரல் 24

ஐக்கிய அராபியக் குடியரசுப் பிரதமர் அலிசாப்ரி இன்று பீகிங்கிலிருந்து ஷாங்காய் சென்ருர். அவருடன் சீனப் பிரதமர் திரு. சூ என் லாயும் சென்ருர். ஷாங்காயில் திரு. மாஸே-துங்கைச் சந்திப்பார் அலிசாப்ரி. வெள்ளிக்கிழமையன்று அவர் டில்லி வருவார்.

## முன்னுள் உதவி மந்திரி இன்று அறிக்கை விடுவார்

### அரசாங்கக் கட்சி கூட்டத்தில் ஹியு பெர்னுண்டோ விஷயம்

கொழும்பு, புதன்

கவர்னர் ஜெனரலால் பதவியிலிருந்து அகற்றப்பட்ட உதவி நீதிமந்திரி திரு. அசோகா கருணரத்ன நாளை பார்லிமெண்டில் ஒரு அறிக்கை விடுப்பார். தனது முன்னைய ஆசனத்தில் திரு. கருணரத்ன வீற்றிருந்த பின், சபாநாயகர் தம் ஆசனத்தில் அமர்ந்தவுடன் எதிர்க்கட்சி ஆசனத்திற்குச் சென்று, அறிக்கை விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை பிற்பகல் 2 மணிக்கு சபை கூடுகிறது. காலை 10 மணிக்கு அரசாங்க பாராளுமன்றக் கட்சியின் கூட்டம் நடைபெறுகிறது. அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தைப் பகிஷ்கரிக்கப்போவதாகக் கூறியுள்ள திரு. ஹியூ பெர்னுண்டோவின் விஷயம் பற்றி அரசாங்க எம். பி.க்கள் கூட்டம் பரிசீலிக்கும் எனத் தெரிகிறது.

திரு. ஹியூ பெர்னுண்டோ மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என சில எம். பி.க்கள் பிரதமரை வினவுவர்கள் எனவும் தெரிகிறது.

## காஷ்மீர்பேச்சு நீடிப்பு

கராச்சி, ஏப்ரல் 24

இன்று முடிவடைந்த காஷ்மீர் சம்பந்தமான கராச்சி பேச்சுக்கள், நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது.

## புயலுக்கு 35 பேர் பலி

கல்கத்தா, ஏப்ரல் 24

கூச்பீகாரில் ஏற்பட்டபெரும் புயல் காரணமாக 35 பேர் மாண்டனர். 167 பேர் காயமடைந்தனர். 7000 பேர் வீடிழந்தனர்.

## 1043 பேருக்கு காவல்

புதுடில்லி, ஏப்ரல் 24

அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்தபின் 1043 பேர்கள் காவலில் வைக்கப்பட்டார்கள் என்றும், அவர்களில் 320 பேர் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## இரத்தினபுரி எம். பி.

கொழும்பு, புதன்

லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து ராஜிநாமாச் செய்த இரத்தினபுரி எம். பி. திரு. தனபால வீரசேகரா மீண்டும் அதே கட்சியில் அங்கத்துவத்துக்கு மனுச்செய்திருக்கிறார்.

## 146 பேர் விடுதலை

புதுடில்லி, ஏப்ரல் 24

146 இந்தியக் கைதிகளை சீன இன்றுவிடுதலை செய்தது.

## யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் நாய் பிடிப்பதற்கான கேள்விப்பத்திரம்

நாய் பிடிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் மாநகர ஆணையாளரால் 7-5-63-ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களைத் தாங்கி வரும் கடித உறைகளின் இடது கரையின் மேலே "நாய் பிடிப்பதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

பிடிக்கப்படும் நாய்கள் ஒவ்வொன்றிற்கும், நாய்க்குட்டிகள் ஒவ்வொன்றிற்கும் தனித் தனியாகக் கோரப்படும் விகிதத்தைக் கேள்விக்காரர் தமது கேள்வியில் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்வி முடிவு திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரருக்கு, அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது குறித்தும் உடனடியாக வேலையை ஆரம்பிக்கும்படியும் அறிவித்தல் தரப்படும்.

மாநகர ஆணையாளர் மிகக் குறைந்த கேள்வியை அல்லது வேறு எந்தக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டவரல்ல.

டி. டி. ஜெயசிங்ஹ,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
18-4-1963

934

## பேறுகால விடுதிகளின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்கான கேள்விப் பத்திரம்

பேறுகால விடுதிகளின் அழுக்குத் துணிகளை சலவைச் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் மாநகரசபை ஆணையாளரால் 7-5-63-ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுகரையின் மேல்பகுதியில் "பேறுகால விடுதிகளின் அழுக்குத் துணியை சலவை செய்வதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

தம்மால் சலவை செய்யப்பட்டு பேறுகால விடுதிகளின் ஒவ்வொன்றிற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அழுக்குத் துணிகள் ஒவ்வொன்றிற்கும் துண்டு ரீதியாகத் தாம் கோரும் விகிதத்தை கேள்விக்காரர் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்வி முடிவு திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரருக்கு அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதுகுறித்தும், உடனடியாக வேலையை ஆரம்பிக்கும் படியும் அறிவித்தல் கொடுக்கப்படும்.

மாநகர ஆணையாளர் ஆகக் குறைந்த கேள்வியையோ அல்லது வேறு எந்தக் கேள்வியையோ ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவரல்ல.

ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர் பிணைப்பணமாக ரூ. 50-ஐச் செலுத்த வேண்டும்.

டி. டி. ஜெயசிங்ஹ,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
18-4-63

935


## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநாத்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


# 'சீனி பற்றுக்குறையை நீக்க உதவுக'

## அயல் நாடுகளிடம் உணவு அமைச்சர் வேண்டுகோள்

கொழும்பு, புதன்

இலங்கையில் ஏற்பட்டுள்ள சீனிப் பற்றுககுறையை நீக்குவதற்கு உதவி செய்யுமாறு உணவு, வர்த்தக, கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின அயல் நாடுகளுக்கு அவசரவேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தில் இரு கப்பல்களிலிருந்து இப்பொழுது சீனி இறக்குமதி செய்யப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் இந்த சீனி நாளைக்கு பாவனையாளருக்குக் கிடைக்குமென்றும், தற்போதுள்ள தேவைக்கு இந்தச் சீனி போதுமானதாகவிருக்குமெனவும் உணவு மந்திரி தெரிவித்துள்ளார்.

பல கூட்டுறவு பண்டகசாலைகளில் போதுமான அளவு சீனி இப்பொழுது கையிருப்பில் இருப்பதாகவும் சீனிப் பற்றுக் குறைக்கு எவ்வித காரணமுமில்லை என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தியேட்டரில் புகைக்கத் தடை

### உடனடியாக அமுலாகாது

கொழும்பு, புதன்

கொழும்பிலுள்ள சினிமா தியேட்டர்களில் புகைபிடிக்கக் கூடாது என்று இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்பு மாநகரசபை முடிவு செய்திருந்தது. ஆனல் மாநகர சபையின் தீர்மானம் சில காலங்களுக்கு அமுலாக்கப்பட மாட்டாது.

இது சம்பந்தமாக கொழும்பு மாநகரசபை கமிஷனர் திரு. டி. ஏ. ஜயசிங்கா தெரிவிக்கையில், குறிப்பிட்ட விஷயத்தில் மாநகரசபை நடவடிக்கை யெடுக்குமுன்னர், சட்ட உப விதிகள் செய்ய வேண்டுமென்றும் இவற்றை பார்லிமெண்ட் முதலில் அங்கிகரிக்க வேண்டுமென்றும் கூறினர்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய 10 H. P. மோட்டார் ஒன்றும், எலக்றிக் வெல்டிங் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 922

### மணமகள் தேவை

மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வருமானமுள்ள (மலைநாட்டு) 25 வயது இளைஞருக்கு 20 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. சீதனம் இல்லை. கிராதரவான பெண் விரும்பத்தக்கது. புகைப்படத்துடன் கடிதம் எழுதவும். C/o. ஈழநாடு. 936

### உடனே உத்தியோகத்திற்கு தேவை

வாகனமுள்ள நேர்மையான இளைஞர் ஒருவர் பிரதேச உத்தியோகஸ்தராக நியமனத்திற்குதேவை. நேரிலே 25-4-63 பிற்பகல் 2 மணிக்கும் 4 மணிக்குமிடையில் விண்ணப்பிக்கவும். ஜெனரல் மனேஜர், 139, பீச் ரோட், யாழ்ப்பாணம். 938


ஆசிரியருக்குக் கடிதங்கள்

## தந்தி தேவையில்லை

வேலையில்லாத் திண்டாட்டத்திலும், வேறு காரணங்களினாலும், பின்னேக்கிச் சென்றுகொண்டிருக்கும் தமிழன் அனாவசியமான செலவுகளைக் குறைத்துக்கொள்ள முன்வரவேண்டும்.

கலியாண வீடுகளுக்கும், முக்கியமான வைபவங்களுக்கும் தந்தி அனுப்புப்பும் வழக்கம் நிறுத்தப்படுவதால், ஒவ்வொரு தந்தியின் மூலமும் தமிழன் 75 சதம் சேமிக்க முடியும். தற்பொழுது அவசரமாக அனுப்பப்படும் தந்திகள், பல நாட்கள் தாமதித்துத் தான் கிடைக்கின்றது. சில தந்திகள் தபால் மூலம் அனுப்பப்படுகிறது. ஆதலால் தந்தியில் அனுப்பப்படும் வாழ்த்துக்களை, தமிழில் எழுதி கடிதம் மூலமோ, போஸ்காட் மூலமோ அனுப்பலாம். இந்த முறை சிக்கனமானதோடு மிகவும் முக்கியமானதுங்கூட.

இந்த நல்ல காரியத்தை தமிழ்ப்பற்றுள்ள ஒவ்வொருவரும் இன்றே ஆரம்பிக்க வேண்டும்.

கே. எஸ். சவுந்தரநாயகம்.
யாழ்ப்பாணம்.

## சித்த ஆயுர்வேத சங்கக்கூட்டம்

'ஈழநாடு' பத்திரிகையில் நேற்று நடைபெற்ற இலங்கை சித்த ஆயுர்வேத சங்கக் கூட்டத்தில் ஆயுர்வேத சபை அபேட்சகர்கள் டாக்டர் ஜெயதிலகாவும், டாக்டர் சிறிசேனவும்மேற்படி கூட்டத்தில் தங்கள் கொள்கைகளை விளக்கிய செய்தியைப் படித்தேன். அத்துடன் மேற்படிசபை அபேட்சகர் டாக்டர் வி. எஸ். நாகலிங்கமும் தன் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.மேற்படி இரு சிங்கள அபேட்சகர்களுக்கும் ஆதரவு அளிக்கப்பட்டதாக வெளியான செய்தி பிழையாகும். ஆகவே இதை வெளியிட வேண்டுகிறேன்.

பொ. செ. துரையப்பா
சுன்னுகம்.

## வெசாக் தினம்

கொழும்பு, புதன்

வெசாக்குடன்சம்பந்தப்பட்ட விழாக்களை சமயத்தின் அடிப்படையில் நடாத்துவதற்கு கலாச்சாரப்பகுதி வேண்டிய ஒழுங்குகளைச் செய்து வருகிறது. இதனல் நாட்டின் எல்லா இடங்களிலும் வெசாக் கொண்டாட்டங்கள் ஒரே முறையில் நடைபெறும்.

இந்த நடவடிக்கைகள் கலாச்சாரப்பகுதியைச் சேர்ந்த புத்த ஆலோசனை சபையின் வேண்டுகோளின்படி செய்யப்பட்டது. இதன் முக்கிய காரணம், ஒவ்வொரு பௌத்த சமயத்தவரும், அவர்களின் கோவிலுக்கு சென்று வழிபடுவதோடு அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளை அவதானித்து நல்ல ஒழுக்கத்தின்படி நடப்பதற்குத் தான்.

க்வெசாக் தினக் கொண்டாட்டத்திற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்யும்படி கோவில் தர்மகர்த்தாக்களுக்கு கலாச்சாரப்பகுதி அதிகாரி திரு. பலிதாவீரமான் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

மாநகரசபை

# கமிஷனருக்கு தமிழ் பயிற்சி

## மாதம் 50 ரூபா வழங்க பிரேரணை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தின் தற்போதைய கமிஷனர் திரு. டி. டி. ஜெயசிங்கா தமிழில் போதிய பயிற்சி இல்லாத காரணத்தால், அவர் தமிழில் தேர்ச்சி பெறுவதற்குதவியாக ஆறு மாதங்களுக்கு 50 ரூபா வீதம் வழங்கவேண்டுமென்று மாநகர சபையில் பிரேரணை கொண்டு வரப்பட விருக்கிறது.

திரு. பீ. ச. சோமசுந்தரம் பின்வரும் பிரேரணையைக் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

'1958-ம் ஆண்டின் 28-ம் இலக்க' தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4-ம், 5-ம் பிரிவுகளின் பிரகாரம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மொயில் கல்விப் பயிற்சி பெற்ற மக்களுடன் இப்பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தமிழ்மொழியிலேயே கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டுமாதலாலும் இவ்வுள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் தமிழிலேயே நடைபெறவேண்டு மாதலாலும் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் தமிழ் மொழியில் வேண்டியளவு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென இச்சபை விரும்புகின்றது. ஆகவே இப்பொதுள்ள ஆணையாளர் தமிழில் தேர்ச்சி பெறுவதற்குதவியாக மாதமொன்று 50 ரூபாவாக ஆறு மாதங்களுக்கு இச்சபை அவருக்கு பணஉதவி கொடுத்து வரவேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது.'

## இ. போ. ச. கட்டிட கூரை இடிந்தது

கொழும்பு, புதன்

கடந்த 60-ம் ஆண்டு தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களினல் கட்டப்பட்ட வெரஹராவிலுள்ள இலங்கைப் போக்குவரத்துசபை கட்டிடத்தின் கூரை இடிந்து விழுந்துள்ளது. இந்தக் கட்டிடம் 4 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இடிந்துபோன கூரையைத் திருத்தியமைப்பதற்கு 50,000 ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தயாரிப்பாளருக்கு பம்பாயில் மேயர் பாராட்டு

பம்பாய், ஏப். 24

பம்பாயிலும் இதர இடங்களிலும் பிரபுராம் பிக்சர்சாரின் 'ராக்கி' ஹிந்திப்பட வெள்ளி விழாக்கொண்டாட்டத்தையொட்டி படத் தயாரிப்பாளர் சிவாஜி கணேசனும், பம்பாய் பட விநியோகஸ்தர்கள் டிலக்ஸ பிக்சர்சாரும் பம்பாய் தாஜ் மகால் ஹோட்டலில் விருந்தளித்தனர். இவ்விருந்தில் பம்பாய் மேயர் திரு. சி. ஏ பாண்டுகவாலா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசினர்.

பிரபல திரைப்படக் கலைஞர்களும், பிரமுகர்களும் கலந்து கொண்டனர். தயாரிப்பாளர் சார்பில் திரைப்பட நட்சத்திரங்களான அசோக்குமாருக்கும், வாஹிதா ரஹ்மானுக்கும் மற்றும் நட்சத்திரங்களுக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டன. அசோக்குமாரும், வாஹிதா ரஹ்மானும் பரிசைப் பெற நேரில் வரவில்லை. இப்படத்தைத் தயாரித்தவரை மேயர் பாராட்டினர் படங்களின் நீளத்தைக் குறைக்கவேண்டியதைப் பற்றியும் அவர் வலியுறுத்தினர்.

விநியோகஸ்தர் சார்பில் படத் தயாரிப்பாளரான சிவாஜி கணேசனுக்கு நடிகர் திலிப் குமார் கேடயத்தை வழங்கினர்.


## SCHOOL OF TECHNOLOGY, JAFFNA

### 1963-64 COURSES

*For Candidates with* **J. S. C.** *standard*

| | |
|---|---|
| Electrical Installation work | Theory and Practical |
| Radio Servicing | |
| Motor mechanism | One Year Courses |

*For Candidates with* **G. C. E.** *Certificate with passes in* **Pure Maths**, **Physics** *and* **English**

| | |
|---|---|
| Electrical Engineering Practice (*Preliminary*) | City and Guilds |
| Electrical Engineering Practice (*Intermediate*) | |
| Electrical Installation Work (*Course A.*) | London |

*Part I.* **Institute of Engineers London**

A.M.I.E.E.; A.M.I.MECH.E.; A.M.I.E.E.

*For Candidates with* **G. C. E.** *Certificate with* **Pure Maths.**, **English** *and preferably with* **Drawing.**

Authorised Draughtsmen—Surveyor General's Exam. in May 1964

| | |
|---|---|
| Civil Engineering Drawing | School Certificate |
| Building Construction | |

*For Candidates with* **G. C. E.** *Certificate with passes in* **Englisn, Pure Maths., Sinhala/Tamil,** *and three other subjects not more than* **Two** *sittings.*

Surveying — S. G's Licence Exam. August 1965.

Applications close on May 15. Courses commence on June 3, 1963. Forms and other particulars can be had from :

" CITADEL " Chundukuli,
JAFFNA. Director.

25-4-63.

# லாவோஸில் சண்டை ஓய்ந்தது!

## நிரந்தரயுத்த நிறுத்தத்துக்கு தலைவர்கள் இணக்கம்

லாவோஸ், ஏப். 24

லாவோஸில் கடந்த ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் சண்டை நடைபெறவில்லையென்றும் ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சண்டை ஓய்ந்தது

கடந்த வாரத்தில் லாவோஸில் ஏற்பட்ட யுத்த நெருக்கடி வெகுவாகத் தளர்ந்துவிட்டதென்றும் பதட்லாவோ துருப்பினருக்கும் நடுநிலைமைத் துருப்பினருக்குமிடையே ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் ஏற்பட்ட சண்டைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைந்துவிட்டன என்றும் ஊர்ஜிதமான செய்திகள் கூறுகின்றன.

### யுத்த நிறுத்த இணக்கம்

நடுநிலைமை படைத் தளபதி ஜெனரல் காங்லீயின் தலைமைக் காரியாலயத்தில், சர்வதேச கட்டுப்பாட்டு ஸ்தாபனத்தின் கோஷ்டியொன்றை நிறுவ மூன்று பிரிவினருக்குமிடையே இணக்கம் ஏற்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் பதட்லாவோ துருப்புக்களின் தலைவருக்கும் நடுநிலைமைபடைத் தலைவருக்குமிடையே இது சம்பந்தமான விஷயத்தில் இணக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தநல்லமுடிவை மேற்கு ராஜீய வட்டாரங்களும் வரவேற்றிருக்கின்றன.

### மீண்டும் திரும்புவார்

ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தில் பதட்லாவோ படையினருக்கும் நடுநிலைமைத் துருப்பினருக்குமிடையே சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் தமது தலைமைக் காரியாலயத்திலிருந்து வாபஸான நடுநிலைமை படைத் தலைவர் ஜெனரல் காங்லீ, ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்திலுள்ள தமது தலைமைக் காரியாலயத்துக்கு மீண்டும் திரும்புவார். இவரது தலைமைக் காரியாலயத்தில்தான் சர்வதேச கட்டுப்பாட்டு ஸ்தாபன கோஷ்டியினர் இருப்பார்கள்.

லாவோஸ் நிலைமை குறித்து பிரிட்டிஷ், சோவியத் வெளியுறவு மந்திரிகள் ஆலோசனை நடத்திய பின்னர், கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர். லாவோஸில் நெருக்கடியைத் தோற்றுவிப்பது அமெரிக்காதான் என்று வேறு ஒரு செய்தி கூறுகிறது.

சீன–பாரத தகராறு

# "நேரடி பேச்சுக்கு இந்தியா தயாரில்லை"

—சீனப்பிரதமர்

## சூஎன்லாய் - அலிசாப்ரி தொடர்ந்து ஆலோசனை

பீக்கிங், ஏப். 24

சீன-பாரத எல்லைத் தகராறு சம்பந்தமாக சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாயும் ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் விங் கமாண்டர் அலி சாப்ரியும் நேற்று மீண்டும் ஆலோசனை நடத்தினார்கள்.

சீன-பாரத எல்லைத் தகராறு சம்பந்தமாக சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாயுடன் பேச்சுக்கள் நடத்தும்பொருட்டு பீக்கிங் வந்துள்ள ஐக்கிய அரபு குடியரசுப் பிரதமர் விங் கமாண்டர் அலிசாப்ரி நேற்று பிரதமர் சூ-என்-லாயைச் சந்தித்து மீண்டும் ஆலோசனை நடத்தினர்.

சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய், எல்லைத் தகராறு சம்பந்தமாகத் தெரிவிக்கையில்; சீன-பாரத எல்லைத் தகராறைச் சுமுகமாகத் தீர்த்துவைக்கத்தான் சீனா அன்றும் இன்றும் விரும்புகிறதென்றும், ஆனால் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்த இந்தியா இன்றும் தயாராகவில்லையென்றும் கூறினார்.

கொழும்பில் கூடிய ஆறு நாடுகள் தெரிவித்த யோசனைகளை பாரதம் முழுமையாக ஏற்றிருந்தாலும், அந்த யோசனைகளை சீனாவும் முழுமையாக ஏற்கவேண்டுமென்று எவரும் எதிர்பார்க்கக் கூடாது. நேரடிப் பேச்சுக்கள் நடத்த இந்தியா இன்றும் தயாரில்லை. ஆனால் இந்தியத் துருப்பினர்கள் எமது எல்லைக்குள் ஊடுருவல் செய்யாமல் இருந்தால், யுத்த நிறுத்தம் தொடர்ந்து நீடிக்குமென்பதில் சிறிதும் சந்தேகப்படத் தேவையில்லை என்றும் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் கூறினர்.

### இலங்கை அதிகாரிகள்

கொழும்பு நாடுகள் தெரிவித்திருந்த யோசனைகள்பற்றி பீக்கிங்கிலும் புதுடில்லியிலும் கொடுக்கப்பட்ட விளக்கங்கள் ஒன்றுக்கொன்று முரணானதாகவிருக்கிறதென்பது உண்மையற்றதென்றும், இரு நாடுகளிலும் ஒரே விளக்கம்தான் கொடுக்கப்பட்டதென்றும் இலங்கை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய நகரங்களின் ஜனத்தொகை

புதுடில்லி, ஏப்ரல் 24

இந்தியாவில் 50 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் மக்கள் வரை வாழும் நகரங்கள் 137 இருக்கின்றன. 1 லட்சத்துக்கு மேற்பட்டோர் வசிக்கும் நகரங்கள் 113 இருக்கின்றன.

தமிழ் நாட்டில் 50 ஆயிரம் முதல் 1 லட்சம் பேர் வரையுள்ள நகரங்கள் 22-ம், 1 லட்சம் பேருக்கு மேல் உள்ள நகரங்கள் 11-ம் இருக்கின்றன.

# ஆட்சி மொழி மசோதாமீது எண்பது திருத்தங்கள்!

## சீனாவின் தவறான எண்ணம் பற்றி டாங்கே அம்பலம்

புதுடில்லி, ஏப். 24

சென்ற அக்டோபரில் கம்யூனிஸ்ட் படையெடுப்பு நடத்தியபோது இங்குள்ள கம்யூனிஸ்ட் நாடுகள் உள்நாட்டு கலவரங்களைத் தூண்டிவிடுவார்கள் என்று எதிர்பார்த்தது: இந்தியாவைப் பிடித்துவிடலாமென சீன கம்யூனிஸ்டுகள் மனக்கோட்டை கட்டிய விஷயத்தை திரு. டாங்கே கட்சிப்பத்திரிகையில் அம்பலப்படுத்தியிருக்கிறார்.

இந்திய மக்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்க சித்தமாக இருப்பதாக சீன கம்யூனிஸ்டுகள் கருதினார்கள் எனவே ராணுவமோதல் அவசியம் என்றும் கருதினார்களாம். இந்தப்பணியில் இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் தங்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டும் என்று நினைத்தார்கள். உள்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்டுகள் தாக்குதல் நடத்தி நேபா முனையில் தாங்கள் முன்னேறுவதற்கு அனுசரணையாக நடந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்த்தார்களாம் இவ்வகையில் நேரு அரசாங்கம் கிடுகிடுத்தாக்குதலை சமாளிக்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் சீனக்கம்யூனிஸ்டுகளின் நோக்கமாம்.

இந்தியாவுக்கு மட்டுமின்றி உலகம் பூராவிலுமுள்ள கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கே பீகிங் தலைமை ஒரு பிரச்சனையைத் தோற்றுவித்திருக்கிறது என்று டாங்கே மேலும் தெரிவித்துள்ளார்.

## தற்காப்பு நிதிக்கு நோட்டு மாலை

சிதம்பரம், ஏப். 24

தென்னாற்காடுஜில்லா கலெக்டர் முயற்சியினாலும் பொது மக்கள் அளித்த நன்கொடை மூலமும் தேசிய தற்காப்பு நிதிக்கு இந்த ஜில்லாவில் ரூ. 20 லட்சமும் இதர பொருள்களும் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்காப்பு நிதிக்காக ஜில்லா கலெக்டர் ஸ்ரீ சோமசுந்தரத்துக்கு காட்டுமன்னார் கோயிலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. முத்து செல்வ கணபதிப்பிள்ளை ஒரு ரூபாய் நோட்டினால் செய்யப்பட்ட மாலை ஒன்றினை அணிவித்தார்.

## இஸ்ரேல் அதிபர் மரணம்

லண்டன், பெப். 24

இஸ்ரேல் ஜனாதிபதி பொன்சிரீ தமது 79-வது வயதில் நேற்றுக் காலமானார். சென்ற வருடம் ஒக்டோபர் மாதத்தில் இவர் மூன்றாவது தடவையாக இஸ்ரேலின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் சிறிதுகாலமாக நோயுற்றிருந்தார்.

## 275 பேர் விடுதலை

புதுடில்லி, ஏப்ரல் 23

சீனாவில் சிறைவைக்கப்பட்டிருந்த 275 இந்திய வீரர்கள் இன்று விடுதலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## 23 பேர்களுக்கு கண் பார்வை

கொழும்பு, புதன்

கண்தான சங்க உதவியின் காரணமாக 23 பேர் கண் பார்வை பெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## "ஹிந்தியை தென்னாட்டு மக்களும் விரும்புகிறார்கள்"

—உள்துறை மந்திரி

### "இல்லை இல்லை" என்று தி. மு. க. அங்கத்தினர் வாதம்!

புதுடில்லி, ஏப்ரல் 24

பாரத ஆட்சிமொழி மசோதாவுக்கு எண்பது திருத்தங்கள் வந்திருக்கின்றன. ஆட்சி மொழி மசோதா குறித்து உள்துறை மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று லோகசபையில் பேசுகையில் மசோதாவை தேசிய நோக்குடன் பரிசீலனை செய்யவேண்டுமென்றும் நாட்டின் பெரும்பாலானோர் ஹிந்தியை விரும்புகிறார்கள் என்றும் கூறினர்.

### 'மொழிப் பிரச்னை தேசிய பிரச்னை'

பாரத ஆட்சிமொழிமசோதா நேற்று லோகசபையில் விவாதத்துக்கு விடப்பட்டது. மசோதாவைப் பிரேரித்து உள்துறை மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி பேசுகையில் நாட்டின் மொழிப் பிரச்னை அந்த நாட்டின் தேசிய பிரச்னையைப் போன்றதென்றும் ஆட்சி மொழி மசோதாவை பரந்த நோக்குடன் தேசிய நோக்குடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கூறினர்.

### கண்டனம்

அவர் தொடர்ந்து பேசியதாவது: "ஹிந்தியை ஆட்சி மொழியாக வைக்கவும், ஆங்கிலம் துணைமொழியாக இருக்கவும் இந்த மசோதா வழிசெய்கிறது. ஆட்சி மொழியாக ஹிந்தி வருவதை எதிர்த்து வன்மையான கண்டனங்கள் இந்த வாரத்தில் வெளியானதை நான் அறிவேன். ஆனால் இந்த மசோதாவை விரிந்த நோக்குடன் பரிசீலனை செய்தால் இதன் உண்மையை எல்லோரும் அறிவார்கள். ஆட்சி மொழி மசோதாவை நன்கு புரிந்த பலர், மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றார்கள்.

ஆட்சிமொழி மசோதா அமுலாகப்பட்டு ஹிந்தி மொழி நாட்டின் அரசகரும மொழியாக்கப்பட்டால் ஹிந்தி தெரியாத ஒருவருக்கு மத்திய அரசாங்கத்தில் உத்தியோகமோ அல்லது பதவி உயர்வோ கிடைக்காது என்று யாரும் கருதக்கூடாது. ஹிந்தி தெரியாத காரணத்தினால் மத்திய அரசாங்கத்தில் ஒருவருக்கு உத்தியோகம் அளிக்கவோ அல்லது பதவி உயர்வு அளிக்கவோ மறுப்புத்தெரிவிக்கப்படமாட்டாது.

### 'ஹிந்திக்கு கேடு விளைவிக்காது'

நான் கொண்டு வந்திருக்கும் ஆட்சிமொழி மசோதாவினால் ஹிந்திக்கு கேடு விளையும் என்று சிலர் கருத்து தெரிவிக்கின்றார்கள். ஆனால் அப்படியல்ல. இந்த மசோதாவினால் ஹிந்திக்கு கேடு விளையாது என்பதை நான் உறுதியாகக் கூறவிரும்புகின்றேன்.

### தி. மு. க. அங்கத்தவர் குறுக்கீடு

ஹிந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழியாவதை நாட்டின் பெரும் பகுதியான மக்கள் விரும்புகிறார்கள் என்றும் ஹிந்தி தான் நாட்டின் அரசகரும மொழியாகவேண்டும் என்பதை நாட்டின் பெரும்பாலானோர் ஒத்துக்கொள்கிறார்கள் என்றும் திரு. லால் பகதூர் சாஸ்திரி கூறியபோது திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தவர்கள் இருவர் குறுக்கிட்டு, "இல்லை... இல்லை" என்று கோஷமிட்டனர்.

கட்சியின் சார்பில் ஆட்சி மொழி மசோதாவைத் தாம் ஆதரிப்பதாக கம்யூனிஸ்ட் அங்கத்தவர் ஒருவர் கூறினர்.

### "தென்னாட்டில் முன்னேற்றம்"

காங்கிரஸ் அங்கத்தவரொருவர் ஆட்சி மொழி மசோதா பற்றிப் பேசுகையில் தென்னாட்டில் ஹிந்தி கற்பதில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றும் தென்னாட்டில் உள்ள பலர் ஹிந்தியை விரும்பிப் பயிலுகிறார்கள் என்றும் கூறினர்.

இன்னும் பத்து வருடகாலத்தில் தென்னாட்டில் பலருக்கு ஹிந்தி மொழி தெரிந்துவிடுமென்றும், ஹிந்தி ஆட்சி மொழியாக விருந்தாலும் விஞ்ஞானத்தை ஆங்கிலத்தில் கற்பிப்பது தொடர்ந்திருக்க வேண்டுமென்றும் கூறினர்.

### ஆட்சேபம்

நியமன அங்கத்தவர் திரு. பிறேங் அன்ரனி, ஆட்சிமொழி சம்பந்தமாகப் பேசுகையில் ஹிந்தியைப் பலவந்தமாகத் திணிக்கக்கூடாதென்றும் எல்லோரினது அபிப்பிராயத்தை முதலில் அறிந்துகொள்ள வேண்டுமென்றும் ஹிந்தி ஆட்சி மொழியாவதைத் தாம் ஆதரிக்கவில்லையென்றும் கூறினர்.

ஆட்சிமொழி மசோதாவை ஆதரித்து பல காங்கிரஸ்கட்சி உறுப்பினர்கள் பேசினர்கள். இருந்த போதிலும் மசோதாவை எதிர்த்தும் வேறுகட்சி அங்கத்தினர்கள் பேசினர்கள்.

ஆட்சிமொழி மசோதாவுக்கு எண்பது திருத்தங்கள் வந்திருக்கின்றன. ஆட்சிமொழி மசோதா சம்பந்தமாக பொது மக்களின் அபிப்பிராயங்களை அறியவேண்டும் என்று சில திருத்தங்கள் கூறுகின்றன. கமிட்டிகள் நிறுவி மொழி மசோதாவை பரிசீலனை செய்ய வேண்டுமென்று சில திருத்தங்கள் கூறுகின்றன. நேற்று நடைபெற்ற மொழி மசோதா மீதான விதாதம் இன்று தொடர்ந்தும் நடைபெறும்.

கட்டாய சேமிப்புத்திட்ட மசோதா சம்பந்தமான விவாதத்துக்கு நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் நேற்று லோகசபையில் பதிலளிக்கையில் பாரதநாடு போன்ற ஏழை நாடுகளுக்கு சிக்கனம் அவசியம் தேவையென்றும் நாடு சிக்கனத்தைக் கடைப்பிடிக்காவிட்டால் முன்னேற்றம் காணமுடியாதென்றும் கூறினர்.

"கட்டாய சேமிப்புத் திட்டமூலம் மக்கள் தங்களது பணத்தைச் சேமித்துவைக்க வழி பிறக்கிறது. பணத்தை சேமிப்பதனால் மக்கள் பயன் பெறுவதுடன் நாமும் பயனடைய முடியும் மக்கள் தங்களது பணத்தைச் சேமிப்பதனால் அவர்களுக்கு வட்டி கொடுக்கப்படுகிறது. சேமிப்புத்திட்டத்தினால், மக்களிடமிருந்து அரசாங்கம் பணத்தைச்சுரண்டுகிறதென்று மக்கள் தவறாக எண்ணக்கூடாது. கட்டாய சேமிப்புத் திட்டம் புதிய முறையில் அமுல் செய்யப்படவிருக்கிறது" என்றும் அவர் கூறினர்.

### மணி வாக்கு

உடலுக்கும் உள்ளத்துக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இதில் ஏதாவது ஒன்று ஒழுங்கீனமானால், நாம் அவதிப்படுவோம். தூய்மையான மனம், சுகாதாரத்துக்கு அடிப்படை. கெட்ட எண்ணங்களும் கெட்ட ஆசைகளும் பலவிதமான நோய்களேயாம்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily. Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 12 உ (25-4-63)


## கடையவனுக்கும் கடைத்தேற்றம்

இலங்கை அரசியல் வானிலே வகுப்புவாத கரிய மேகங்கள் இன்னும் கலையாதிருப்பினும், தமிழ், சிங்கள வாலிபர்களில் பலர் கிளிநொச்சி உருத்திரபுரத்திலே சென்ற வாரம் சேர்ந்து உடலுழைப்பு ஆக்க வேலையில் ஈடுபட்டு, சுமார் மூன்று பர்லாங் தூரமுள்ள ரஸ்தா போட்டு ஒத்துழைக்க முடிந்தது பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமான செயலாகும்.

வேலை எவ்வளவு செய்யப்பட்டதென்பது விஷயமல்ல. இரு சமூகங்களையும் சேர்ந்த வாலிபர்களும் உற்சாகத்துடனே எவ்விதவகுப்பு மொழி, மதம் முதலிய வேற்றுமை எண்ணங்களை மனதில் வைக்காமல், வருமானத்தையும் கருதாமல் உடலுழைப்புமூலம் தொண்டு செய்ய முன்வந்ததுதான் பெரியகாரியம். தெற்கிலிருந்து வந்த சிங்களத் தொண்டர்களை அன்புடன் வரவேற்று அவர்களை கிளிநொச்சிப் பொதுமக்கள் உபசரித்திருக்கிறார்கள். கிளிநொச்சி எம். பி.யும் வடமாகாண அரசாங்க ஏஜெண்டும் பல அதிகாரிகளும் இந்த இயக்கத்துக்கு ஆதரவளித்திருக்கின்றார்கள். இந்தமூன்று நாட்களிலும் இரு சமூகத்தவரும் சகோதரர்கள் போல் நெருங்கிப் பழகி பணி செய்ததால், அங்கு வகுப்புவாதமும் பரஸ்பர பீதியும் ஓரளவு மறைய முடிந்தது.

இவ்வித தொண்டிலே இரு சமூகங்களைச் சேர்ந்த வாலிபர்களும் அதிகமாக ஈடுபட ஆவல் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால், இனம், சமூகம் அரசியல், மதம், மொழி முதலிய வேற்றுமை எண்ணங்கள் எதுவுமின்றி நாட்டுத் தொண்டிலே பலரும்ஈடுபடத் தயாராக இருக்கின்றனரென்பது அங்கு அறிய முடிந்தது. நாட்டின் எதிர்காலத்துக்கு இது புதிய நம்பிக்கை அளிப்பதாகும்.

தென்னிலங்கையிலிருந்து வந்த கோஷ்டியின் தலைவர் ஆரியரத்ன, உருத்திரபுரத்தில் கடைசி நாளன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்திலே பேசுகையில் ஒரு முக்கிய விஷயத்தை வற்புறுத்தினார். சென்ற 15 ஆண்டுகளாக இங்கு நடைபெற்ற 'ஜனநாயக ஆட்சி' மக்களுக்கு நன்மை விளைவிக்கவில்லை என்றார். வகுப்புவாத பூசல்கள் ஏற்பட்டு மக்களைப் பிரித்துள்ளதென்றும் இதுபற்றி பொதுமக்கள் மிகவும் அதிருப்தியடைந்துள்ளதாகவும் கூறி, அடுத்த பத்து ஆண்டுகள் தான் நமது எதிர்காலத்தை நிர்ணயிக்குமென்றும் இங்கு 'கிராமக் குடியரசு' ஏற்படுத்தி ஒவ்வொரு கிராமமும் ஒரு குடும்பமாக ஒத்துழைக்க வேண்டுமென்றும் விநோபாபாவே காட்டிய வழியில், சிரமதான இயக்கத்திலே இங்கு இருசமூக வாலிபர்களும் உற்சாகத்துடன் முன்வந்து ஆக்க வேலையில் ஈடுபட்டது புது நம்பிக்கை அளிப்பதாகவும், இந்த வழிதான் நாட்டுக்கு விமோசனமளிக்கவல்லதென்றும் குறிப்பிட்டார்.

சாதி, மதம், கட்சி, மொழி முதலிய பல்வேறுவிதங்களிலும் மக்களைப் பிரிப்பதற்கான முயற்சிகள் நடக்கும் இச்சமயத்தில் மக்களை எல்லாம் ஒன்றுபடுத்தி ஆக்க வழியிலே பரஸ்பர நன்மைக்கான முறையில் ஒத்துழைக்க வழிகாட்டும் ஓர் இயக்கம் அந்தகாரத்தில் ஒரு மின்னல் வெளிச்சம் தோன்றுவது போலுள்ளது இந்த சர்வோதய இயக்கம், நாடெங்கும் அதிகமாகப் பரவ' மக்களிடையே ஒற்றுமையும் அன்பும் அதிகரிக்கவும் கடையவனுக்கும் கடைத்தேற்றம் பிறக்கவும் முடியும். ஜனநாயகம் எனும் பெயரால் நடக்கும் ஆட்சியில் சிறுபான்மையினர் எதிர்காலம்பற்றி திகைத்திருக்கையில் அவர்களும் சரிநிகர் சமானமாக வாழ முடியுமென்ற நம்பிக்கையை சர்வோதயம்தான் அளிக்கக் கூடியதாகவுள்ளது.

# சிரமதான இயக்கத்தில் ரசமான சிலசம்பவங்கள்

—ஈழத்துச் சிவானந்தன்—

உலக உத்தமர் காந்தி மகானால் ஆரம்பிக்கப்பட்ட சர்வோதய இயக்கம், இன, மத, மொழி வேற்றுமைகளைக் கடந்து வளர்ந்து செழித்திருப்பது சர்வதேச நலனுக்கும், நல்வாழ்விற்கும் உகந்ததாயிருக்கிறது. எல்லோரது மேம்பாட்டினையும் குறியாகக் கொண்டு தொண்டு செய்யும் சர்வோதய ஊழியர் இனத்தால் வேறுபட்டாலும், மனத்தால் ஒன்று பட்டு உழைப்பது கண்கூடு. காந்தி மகான் காட்டிய பாதையில் சென்று இன்று எல்லோரது மகிழ்வுக்காகவும் நாளும் பொழுதும் உழைக்கும் உத்தமர் விநோபாபாவேஉருவாக்கிய சிரமதானம் சிறந்தோங்கியுள்ளது. பூதானம், சம்பத்தானம், வித்தியாதானம் போன்ற தானங்கள் உலகின் உலகின் மூலை முடுக்குகளில் நடைமுறையிலிருந்து நலன் விளைவிக்கின்றன. இந்திய நாட்டு மண்ணில் சிரமதான இயக்கம் பரவியுள்ளதைப் போலவே ஈழநாட்டிலும் வளர்ந்து நிமிர்ந்துள்ளது.

இன்று இலங்கைக்கு வேண்டிய அத்தியாவசிய முயற்சிகளில் சிரமதானமும் ஒன்று என்பதை உணர்ந்த ஈழத்துச் சர்வவோதய இயக்கத்தினர், வேற்றுமைகளை மறந்து பிளவுகளை ஒதுக்கி தெற்கிலும் வடக்கிலும் சிரமதானத்தில் ஈடுபட்டுழைக்கின்றனர். சென்ற ஏப்ரல் 19,20,21-ம் திகதிகளில் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்துக்கருகாமையிலுள்ள வீதியைச் செப்பனிடும் திருப்பணியில் அறுபதுக்கு மேற்பட்ட சிங்கள சகோதரர்களும் ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் கலந்து, பிணைந்து தொண்டாற்றினோம். மொழிப் பிரச்னைகளும், இன வெறியும் தலைவிரிகோலத்தில் தாண்டவமாடும் இன்றைய இருள் நிரம்பிய வேளையிலே ஈழமாதா ஈன்றெடுத்த குழந்தைகள் ஒற்றுமையாகத் தொண்டாற்றியது பாராட்டத்தக்கது.

சிரமதானத்தில் ஈடுபடுவதற்கு முன் அதிகாலையில் எழுந்து கடன்களை முடித்து, கடவுள் வணக்கம் செலுத்தி, தமிழ், சிங்களம், ஆங்கிலம் போன்ற மும்மொழிகளிலும் திருக்குறள், பைபிள், இரான் போன்ற நூல்களிலிருந்து சில உண்மைகளைப் பாராயணம் பண்ணிவிட்டுப் புறப்படுவோம்.

கதிரவனின் தகிப்பிலும் வர்ணபகவானின் தண்மையிலும் தோய்ந்து தோய்ந்து வீதி அமைத்ததோடு; இரு இன இணைப்புக்கும் பாலம் போட்டோம். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கினால் அனைவர்க்கும் தாழ்வே' என்ற உணர்வு எங்கள் இதயங்களில் எழுந்து எழில் காட்டிநின்றது. வேலை முகாமில் இரு இனத்தவர்களிடையிலும், முறைப்போ விறைப்போ, கோபமோ,குரோதமோ தலைகாட்டவில்லை. மாறாக, கனிவும்–கண்ணியமும்–பணிவும் காணப்பட்டன."மட்ட படகினி-தமச நிகங்கின்ன-பத்ஒண-கோ; மாத்தையா" போன்ற சிங்களச் சொற்களை தமிழர்களும், 'தண்ணி தாருங்கோ–மண்வெட்டி எங்கே? கூடைவைத்திருக்கிறீங்கா ஐயா" என்கின்ற தமிழ் வாக்கியங்களைச் சிங்களரும் பரஸ்பரம் கற்றுக் கொண்ட காட்சி இதயத்தை மகிழ்ச்சியில் ஆழ வைத்தது.

இயக்கத்தில் ஈடுபட்டிருந்த தொண்டர்களுக்கு உள்ளூர் வாசிகள் இளநீர், தேநீர் போன்றவைகளைக் கொடுத்துக் களைப்பாற்றினர். "பிறந்து வளர்ந்து, பணம் கொடுக்காது இளநீரைப் பருகியதில்லை; வடஇலங்கையில் தான் முதன் முதலாக இலவச இளநீர் அருந்துகின்றேன்" என்றார் ஒரு சிங்கள நண்பர். மண்ணை-வெட்டி கூடையில் போடும்போது மண்வெட்டி தற்செயலாகக்காக வில் கீறி ஒரு சிங்கள நண்பரின் இரத்தத்தைச் சித்தவைத்தது பக்கத்தில் நின்றோர் பதைத்தபடி அவரை அணுகினோம். அவர் முகமலர்ச்சியுடன் சிரித்தபடி, 'பறுவாயில்லை -என் இரத்தம் உங்கள் மண்ணில் விழுவதை பெரும் பேறுகக் கருதுகிறேன். நேச உறவுக்கு என் இரத்தத்துளிகளும் துணை செய்யப்படும்' எனச் சொன்னார்.

சிங்கள. தமிழ்த்தொண்டர்களின் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி ஒற்றுமைக்காக உதவட்டும் என, வேறொருவர் பகன்றார். மண்ணைக் கோலி வீதியில் போடும் பொழுது நிலத்தில் பள்ளம் உண்டாகியது. பகடியாக "உங்களை வெட்டி இந்தப் பள்ளத்தில் தள்ளி மூடிவிட்டால் என்ன செய்வீர்கள்" எனச் சிங்களர் ஒருவரைக்கேட்டேன். "மனப்பூர்வமாக அதை நான் வரவேற்பேன். வெட்டிப் புதைக்கும் போது, சர்வோதயம்-சர்வோதயம் என்றபடி சாவேன். சிரமதான இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பசளையாவேன் என்றார். அவர். இரத்தை, வியர்வையை, முடியுமானால் உடலைக்கூட உவப்புடன் தானம் செய்து இரு இன ஒற்றுமைக்கும் வழிதேடுவதே அவர்களது நோக்காயிருந்தது.

வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டுமென்ற நயத்தக்க நாகரிகம் சிங்கள் நண்பர்களிடையே காணப்பட்டதை நினைக்க 'விடிவுகாலம் விரைவில்' என்ற எண்ணம் எழுகிறது. வேலை ஸ்தலத்தில் "இறைவனே, ஈழமாதாவைக் காப்பாற்று–அவள் மடியிலுள்ள குழந்தைகளை ஒற்றுமையாக்கு–குடிசை வாழ் மக்களின் மகிழ்வுக்கு கருணை காட்டு–கிராமங்களின் முன்னேற்றத்துக்கு வழி செய்" என்கின்ற பொருள்பொதிந்த சிங்களப் பாடலை அவர்கள் பாடிப்பாடி வேலை செய்தமை அவர்களது களங்கமற்ற தெளிந்த உள்ளத்தைக் காட்டியது.

மாலையில் சிரமதானம் முடிந்ததும் கருத்தரங்கள் நடைபெறும். அவ்வரங்கில் காரசாரமான வாதங்கள் எழுந்து ஒரு கலக்குக்கலக்கிவிடும். ஆனால் காரசாரங்கத்திலும் ஒரு கண்ணியம்-பிறர் கூற்றை மதிக்கும் பண்பு இருந்தது.

ஒரு நாள் நடைபெற்ற விவாதத்தின்போது கதர் அணிந்த தமிழர்ஒருவரைப் பார்த்து ஒரு சிங்கள நண்பர்"நீங்கள் காந்தி இலச்சினையோடு காணப்படுவதை ஒரு தெய்வீகக் காட்சியாகவே கருதி வணங்குகிறேன். என்னால் உங்களைப் போல் கதர் அணிய முடியவில்லையே என்பதற்காக வருந்துகிறேன்" எனச் சொல்லிக் கண்கலங்கினார். 'வட இலங்கைக்கு நாங்கள் வந்து நமது உறவைப் பலப்படுத்துவதைப் போன்று நீங்களும் தென் இலங்கைக்கு வரவேண்டும். பயமும் பயமுறுத்தல்களும் சர்வோதய நெஞ்சங்களிலிருந்து விலகவேண்டும்'எனக் கூறி வேண்டுகோள் விடுத்தார் மற்றொருவர்.

சிரமதான முகாமில் சில நகைச்சுவை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

சிங்கள நண்பர்களின் குழுவுக்குத் தலைமைதாங்கிவந்த திரு. ஏ. ரி. ஆரியரத்தினவின் அடக்கமும் அன்பும், விநோபாபாவேயின் இயக்கத்தின் வெற்றியைக் காட்டிநின்றன. "பாரத நாட்டில் பதினெட்டு மொழிகளையும் படித்து, எந்த அரசியல் கட்சியினாலும் உண்டாக்க இயலாத ஒற்றுமை மனப்பான்மையை உண்டாக்கிய விநோபாபாவேயைப் பின்பற்றினால்–நமது நாட்டில் இரு மொழிகளால் உண்டாகியிருக்கும் ன்னல்கள் சுமுகமாகத் தீரும்" எனக் கூறிய திரு. ஆரியரத்தின தென இலங்கையில் தமிழர் .......ம் பாடம் கேட்பதாக அ.....பொழுது ஆனந்தமடைந்தோம். மூன்று நாட்களும் தமிழர் தரும் சோறும் கறியும் சிங்களருக்கு தமிழர்கள்மேல் பாசத்தைச் சொரியக்கூடிய இதரர்கள்—இனிமைநிறைந்த இன்பத் தமிழ்க் கவிதைகளில் சிலவற்றை எங்களிடமிருந்து கேட்டு சிங்களத்தில் எழுதி மனனம் செய்தமை மனத்தை மகிழ்வித்தது. இறுதியாக ஈழத்துச் சிங்களத் தமிழ்ச் சகோதரர் அனைவரும் காந்தியத்தைப்பின்பற்றி வாழ்வாங்கு வாழ்வதற்கு அத்தகைய நிலையை உருவாக்க பிரதிக்ஞை செய்துகொண்டு திக்குத் திக்காகப் பிரிந்து கொண்டோம்.

வாழ்க சர்வோதயம்! வளர்க சிரமதானம்!!

## ஐயாறன் எழுதுவது

நேற்று தபாலில் ஒருபெரிய புத்தகம் கிடைத்தது. 350 பக்கங்கள். பார்க்க அது ஓர் அரசாங்க அறிக்கைபோலிருந்தது. அடி முதல் நுனிவரை எல்லாம் சிங்களம்தான். இந்த அறிக்கை எதைப்பற்றி என்று, சிங்களம் அறியாதவர்கள் தெரிந்துகொள்ள முடியாதபடி நம்மைக் குருடாக்கியது.

சிங்களம் தெரிந்த ஓர் அன்பரிடம் இதைக்காட்டி, என்ன விஷயமென்று கேட்டேன். இது 1960–ம் வருடத்தில் இலங்கையிலே ஏற்பட்ட மரணங்களையும் அதன் காரணங்களையும்பற்றிய புள்ளிவிவரங்கள் என்று தெரியவந்தது. முக்கியமான இந்த விவரங்களை இந்நாட்டிலுள்ள எல்லா மக்களும் தெரிந்துகொண்டு, கவனமாக இருக்கவே இவ் விவரங்களை புத்தகவடிவிலே, பொதுச்செலவிலே அச்சடிப்பது. இப்புத்தகத்தின் விலை ரூ. 9-60. ஆனால் சிங்களம் தெரியாதவர்களுக்கு இது பயன்பட முடியாது. தனிச் சிங்களச் சட்டத்தின் பயன் இதுபோலும்!

* * *

மற்ற இலாகா நிர்வாக அறிக்கைகளை, சிங்களத்திலும் ஆலங்கிலத்திலும் வெளியிட்டு வருவதைப் பார்க்கிறோம். தமிழ் ஒதுக்கப்பட்டாலும், ஆங்கிலத்துக்காவது சற்று இடம் அளித்திருந்தனர். இதில் ஆங்கிலத்துக்கும்கூட இடமில்லை. சிங்கள சமூகம் பெரும்பான்மையாக இருக்கலாம். ஆனால் சிங்களம் தெரியாத ஒரு பெரிய சமூகம் இந்நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வருகிறதென்பதையும், அவர்களுக்கும் இங்கு மானத்துடன்வாழ பிறப்புரிமை உண்டென்பதையும், ஆட்சியாளர்கள் சற்றே உணரவேண்டும்.

* * *

அந்தப் புத்தகத்தின் முதல் பக்கத்திலே தலைப்பில் ஓர் அரசாங்க முத்திரையுள்ளது. அதில் "இலங்கை" என்று தமிழ் உள்ளிட்டு மூன்று மொழிகளிலும் பொறித்திருக்கின்றது. இதன் கருத்தென்ன? மூன்று மொழிகளையும் அரசாங்கம் மக்கள் மொழிகள் என்று அங்கீகரித்துள்ளதற்கு இது அடையாளமல்லவா? அப்படி இருந்தும் இருமொழிகளையும் நீக்கிவிட்டு சிங்களத்தில் மட்டும் அறிக்கை வெளியிடுவதுதான் நேர்மையாகுமா?

மொழி விஷயமாகச் சமரசம் பேச முனைபவர்கள், இதையும் கவனத்தில் கொண்டு இதை பிரதமரிடம் எடுத்துக் கூறி இந்த அநீதியை சீக்கிரத்தில் நீக்க முனைய வேண்டுமென்றே இதை எழுதுகின்றேன்.

* * *

பாடப்புத்தகமொழி பெயர்ப்பைப்பற்றி ராஜாஜி 'சுயராஜ்யா' பத்திரிகையில் எழுதியிருப்பதை வெட்டி ஒரு கொழும்பு நண்பர் அனுப்பியுள்ளார். அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

ஆங்கிலத்திலிருந்து தமிழில் புத்தகங்களை மொழி பெயர்ப்பது நல்லது. ஆங்கிலம் தெரியாதவர்களிடையே பொது அறிவைப்பரப்ப அவை உதவலாம்.ஆனால் கல்லூரி மாணவர்களின் பாடப்புத்தகமாக வைக்க இந்நூல்களை மொழி பெயர்ப்பது மிக ஆட்சேபகரமாகும். ஆங்கில மூலபுத்தகத்தையே கல்லூரியில் படிக்கும்படி செய்ய வேண்டும். மொழி பெயர்ப்பாளருக்கு அவ்விஷயத்தில் மேலெழுந்தவாரியான அறிவே இருக்கக்கூடும். மொழி பெயர்ப்புக்கு அதிக பணச் செலவாகும். இதில் சுயநலத்துக்கு இடமிருப்பின் அதனால் தொந்தரவுகளும் ஏற்படலாம்.

இலங்கையிலும் இதுபற்றி சம்பந்தப்பட்டவர் சிந்திக்க வேண்டும்.

* * *

அம்மைபயக்கும் அமிர்து

(5-ம் பக்கம் பார்க்க)

# "நாவுக்கரசரின் நாட்டுத்தொண்டு நம்மிடையே உருவாகவேண்டும்"

—சோ. க. தம்பிப்பிள்ளை

## "மொழிப்பிளவுகளை அகற்ற சிரமதானம் உதவும்"

—ஏ. டி. ஆரியரத்ன

### சிரமதானமுகாம் கருத்தரங்கத்தில் பேச்சு

கிளிநொச்சி, புதன்

"பண்டைக்காலத்தில் திருநாவுக்கரசர் ஆரம்பித்து வைத்த சிரமதான இயக்கத்தை நாம் இடையில் கைவிட்டோம். நாவுக்கரசர் கோயில் வீதியை உழவாரத்தினால் முள்ளு, கல்லு ஆகியவற்றை நீக்கி சமுதாயத்தின் தேவையை உணர்த்தினர். இனிமேலாவது இத் திருப்பணிகளை நாம் தொடர்ந்து செய்யவேண்டும்" என திரு. சோ. க. தம்பிப்பிள்ளை உருத்திரபுரம் சிரமதான முகாம் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

**அப்பரடிகள் உருவாக்கினர்**

மேலும் அவர் தெரிவித்ததாவது:- இன்று திருநாவுக்கரசரது குருபூஷைத் தினத்திலே சர்வோதய அடிப்படையில் நாம் சிரமதானம் செய்தோம். நாவுக்கரசரின் நயத்தக்க நாட்டுத் தொண்டும் நல்லெண்ணமும் நம்மிடையே உருவாகி உரம்பெற வேண்டும். உழவாரத் திருப்பணியால் கோயில் வீதிகளில் தொண்டுசெய்த அப் பெரியாரின் வழியில் நாம் செல்லுவது மகிழ்வைத் தருகிறது. சர்வோதயா சிரமதான இயக்கம் இன்று நேற்று உருவாகியதல்ல. 7-ம் நூற்ருண்டிலேயே அப்பரடிகளால் உருவாக்கப்பட்டது. அந்த வித்து மகாத்மா காந்தி அடிகளாலும் வினேபா அடிகளாலும் விருட்சமாக்கப்பட்டுள்ளது. சாதி மத, இன வேறுபாடுகளை ஒழிக்க முனைந்த நாவுக்கரசர் சிரமதானத்துக்கே தம்மை முழுக்க முழுக்க அர்ப்பணித்தார். இன்று இலங்கையிலே இரு இனப் பிணக்கும்-பிளவும் முற்றியிருக்கிற சூழ் நிலையிலே சிங்கள - தமிழ் மக்கள் ஒன்று கூடியிருக்கிறேம் என்ருல் நமதுசர்வோதயகொள்கை பரிபூரன வெற்றியைப் பெற்றிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

**சர்வோதய நெறி வழிகாட்டும்**

உள்ளத்தாலும் ஒற்றுமைபட்ட இனங்களாக நாம் திகழ சர்வோதய நெறி நமக்கு வழிகாட்டி நிற்கிறது. ஒவ்வொரு புனித தினங்களையும் நாம் சர்வோதய - சிரமதான தினங்களாக கருதிக் கடமை செய்ய வேண்டும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" தொண்டலாது உயிர்க்கு ஊதியமில்லை என்ற தாரக மந்திரங்கள் நம் நெஞ்சை விட்டகலாது ஒளிக வேண்டும்.

நாட்டுத் தொண்டினைப்பற்றி முதல் முழக்கம் செய்த நாவுக்கரசரின் குருபூசை தினத்தில் வீதிக்கு மண்சுமந்து போடுதல் எவ்வளவு பொருத்தமாயும் - தெய்வீகமாயும் இருக்கின்றது. வேற்றுமைகொண்ட தமிழர் - சிங்கள மக்களும் பரஸ்பரம் நல்லெண்ணத்தை பரப்பி உருத்திரபுரம் வீதியோடு மாறுபட்ட உள்ளங்களையும் இணைக்கும் வீதியையும் அமைக்கமுயன்றிருக்கின்றேம். வெற்றியும் பெற்றிருக்கின்றேம். அன்பின் அடிப்படையில் எழுந்த சர்வோதய இயக்கம் வளப்பமாய் வளர்ந்து செழிக்க ஒவ்வொரு தினத்திலும் சிரமதானத்தில் ஈடுபட்டுத் தொண்டாற்றவேண்டும். அதுவே இப்போது வேண்டப்படும் அதி முக்கிய தேவையுமாகும்".

**சமூகப்பணி**

திரு. ஏ. டி. ஆரியரத்தின பேசுகையில் பின்வருமாறு கூறினர்: சிரமதான இயக்கத்தில் சிறுவர்களும் பங்கு கொண்டு உழைப்பது எனக்கு பெருமகிழ்ச்சியைத் தந்தது. நண்பர் தம்பிப்பிள்ளை கூறியதுபோல் 7-ம் நூற்ருண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசரைப் போல் நாட்டு நலனில் அக்கறை கொண்ட நல்லவர்கள் இன்றும் இருக்கிருர்கள். ஆசார்யவினேபாஅடிகள் நாவுக்கரசரைப் போன்று சமூகப் பணிக்கே தன்னை அர்ப்பணித்திருக்கிருர். வினேபா ஒரு முனிவர். சிறந்த தெய்வ பக்தி நிறைந்த ஞானி சைவமதத்திலுள்ள அடியார்கள் அந்தக் காலத்தில் சமுதாய முன்னேற்றத்திற்காக சிரமதானிகளாக இருந்தார்கள் என்பதை அறிய உற்சாகமாக இருக்கிறது.

**அந்தஸ்துகளை உதறித்தள்ளினர்**

கிராமத்தின் முன்னேற்றமும் கிராமமக்களின் மேன்பாடும் நாட்டு வளர்ச்சிக்கு வேண்டுமென கருதிய காந்தியடிகள் செல்வச் செழிப்போடு இருக்கவேண்டிய தமது அந்தஸ்துகளை உதறித்தள்ளிவிட்டு ஒரு கிராமத்தில் குடிசை போட்டு அதில் வாழ்ந்து கடைப்பிடிக்கவேண்டிய நெறிகளைப் போதித்தார். கருணையும் கண்ணியமும் கொண்ட மகாத்மாவின் சர்வோதய மனப்பான்மை மக்கள் உள்ளங்களில் உறைந்ததினுல் உருப்படியான நன்மை உருவாகியது மக்கள் சக்தியைத் திரட்டி வேற்றுமைகளை ஒழிக்கமுயன்ற அந்த மகானின் பாதையில் சென்ற வினேபா அடிகள் இன்றும் நம்மிடையே இருந்து சர்வோதய சமுதாயத்தை அமைத்து வருகின்ருர்கள்.

**வினேபாவின் வழி**

நமது நாட்டிலே பாஷைப் பிரச்சினை சிக்கலாக வளர்க்கப்பட்டுள்ளது. பிளவாகி-பேதங்களை உண்டாக்கியுள்ளது. நமது தாய் நாடாகிய பாரத நாட்டில் வயதால் கூடி அனுபவத்தால் உயர்ந்து திகழும் வினேபா அடிகள் அந்த நாட்டில் உள்ள எல்லா மொழிகளையும் கற்றிருக்கின்ருர், அவரை நேரில் தரிசித்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சுமார் 24 மொழிகளைக் கற்றிருக்கும் வினேபா அடிகள் சர்வோதய இயக்கத்தால் மொழிப்பிரச்சினையைத் தீர்த்துவருகின்ருர்.

**சமுதாயத்தைத் திருத்திய மகான்கள்**

நாளாந்த வாழ்வில் ஒரு ஒழுங்கு முறையான ஒழுக்கத்தை மேற்கொள்ளும் வினேபாஅடிகள்நடந்துநடந்து சுமார் 50 ஆயிரம் மைல்கள் யாத்திரை செய்து சர்வோதய இயக்கத்தை வளர்த்துவருகின்ருர். சுமார் 55 லட்சம் ஏக்கர் நிலத்தைத் தானமாகப் பெற்ருர். 1500 கிராமங்களையே பூரண தானமாகப் பெற்ருர். இவற்றை நிலமில்லாத ஏழை மக்களுக்கு விநியோகிக்கின்ருர். காந்தியடிகளும் வினேபா அடிகளும் தூய வாழ்க்கை முறைகளினல் சமுதாயத்தைத் திருத்தி உயர்த்திய மகான்கள். அவர்களது அயராத பணிகளும், சுகவாழ்வு முறைகளும் சர்வோதய சிரமதான இயக்கத்தை வளர்த்து சகல மக்களதும் நல்வாழ்வுக்கு உதவுகின்றன. இத்தகைய சிந்தனைகள் வளர்ந்து மக்கள் மனதில் உரம் பெற முற்காலத்தில் சிரமதான பணிகளினல் பணிசெய்த பெரிய மகான் திருநாவுக்கரசரது ஞாபகமும் சரித்திரமும் நமக்கு உறுதுணையாகும்.

ஆகவே உருத்திரபுரம் மகாவித்தியாலய வீதியைச் சிரமதானத்தின் மூலம் செப்பம் செய்யும் நாம் இந்த நாட்டின் இன வேறுபாடுகளைக் களைந்து மொழிப் பிளவுகளை அகற்றி ஒற்றுமையாக எல்லோரதும் விமோசனத்துக்காக வாழ்வோமாக. இங்குள்ள சிறுவர்கள் சிறுமிகள் சர்வோதய இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றுவார்களாக."

## 'சர்வாதிகார..:

-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றிருக்கும் ஞானசீக தேரோ தெரிவித்திருக்கும் யோசனைகள் பெரும் கேடுகளை விளைவிக்கக் கூடும். கடந்த வருடம் ஜனவரி மாதம் 27-ம் திகதி தோன்றிய ஒரு அபாயகரமான நிலையை வகுப்பதற்கு ஞானசீகதேரோ இப்போது கூறியிருக்கும் இந்த விதமான கருத்தே காரணமாகவிருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**தேரோ கருத்து**

நாட்டின்பிரச்சினைகளைத் தீர்க்க பிரதமரின் தனிப்பட்ட சர்வாதிகார ஆட்சிதான் உதவுமென்றும் பர்மா, இந்தோனேஷியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கடைப்பிடித்த வழியைத்தான் நாமும் பின்பற்ற வேண்டுமென்றும் வண. ஹென்பிட்ட ஞானசீகதேரோ கருத்துத் தெரிவித்திருந்தார். இது சம்பந்தமாகவே கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டாய் அந்தேன் தெளி
கண்டாய் ஆக்கஞ் செய்திட்டு,
இம்மை பயக்கும் இறைவன்
கண்டாய் என்னெஞ்சே உன்
னில் இனியான் கண்டாய்,
மெய்ம்மையே ஞான விளக்குக்
கண்டாய் வெண்காடன் கண்
டாய் வினைகள்போக, மம்பர
னுக்கும் மருந்து கண்டாய்
மறைக்காட்டுறையும் மணுளன்
தானே.

— திருநாவுக்கரசர்.

## 'எவ்விதம் வாழ்வது? வல்லரசுகள் முடிவுசெய்யட்டும்'

—ராஜாஜி

சென்னை, ஏப். 24

ரோமிலுள்ள வணக்கத்திற்குரிய பாப்பரசர் விடுத்துள்ள வேண்டுகோளில் அணு ஆயுத சோதனைகளை நிறுத்திவிடுமாறும் மனித இனத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் ஆயுதப் போரைக் கைவிடுமாறும் தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஆயுதப் பேராபத்தில் சிக்கியுள்ளவர்கள் உட்பட அகில உலகமும் பாப்பரசருக்குத் தமதுநன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது என ராஜாஜி 'சுவராஜ்யா' பத்திரிகையில் கருத்துவெளியிட்டுள்ளார்.

ராஜாஜிஇதுகுறித்துமேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் பாப்பரசரை சமீபத்தில் சந்தித்தபோது இவ்விதமானதொரு வேண்டுகோளை தகுந்த சூழ்நிலையில் விடுக்கப்போவதாகத்தெரிவித்தார். இப்பொழுது அவர் வேண்டுகோளை விடுத்துள்ளார். உலகின் வல்லரசு நாடுகள் இதைக்கருத்தில் கொண்டு ஆராய்ந்து செயலாற்றவேண்டும். கிறிஸ்தவர்களாக வாழ்வதா அல்லது கொலைகாரர்களாக வாழ்வதா என்பதையும் முடிவற் அச்சத்துடன் வாழவதா அல்லது ஒருவர் மீது மற்றெருவர் நம்பிக்கை கொண்டு நாகரிகமான முறையில் வாழ்வதா என்பதையும் இவர்கள் தீர்மானிக்கவேண்டும்.

## "சுயநலத்துக் கெதிராக தியாகம் செய்யவேண்டும்"

### ஆசிரியர்சங்க மகாநாட்டில் உதவி வித்தியாதிபதி பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

"அரசாங்கமும் மக்களும் ஒன்று என்ற மனேபாவம் இன்னும் எம்மிடையே வளரவில்லை. அரசாங்கம் எதனைச் செய்தாலும் அதனை விழுத்த வேண்டுமென்ற தீய எண்ணமே மேலோங்கியுள்ளது. இதனுல் நன்மையான செயல்கள் குறைந்து தீயன மலிந்து விடுகின்றன. சுயநலத்திற்கெதிராக தியாகம்செய்யவேண்டும். தியாகத்தினுல் பிரச்சினைகள் எழமாட்டாது" உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் நேற்றுக்காலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிய சங்க வடபிரதேசக் கிளைகளின் விசேஷ மகாநாட்டில் பேசுகையில் கூறினர். திரு. ஐ. ஆ. இராமசாமி இம் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

திரு. சோமசேகரம் தொடர்ந்து பேசியதாவது:

அரசாங்கத்தின் பிரச்னைகள் முடிவில் நம்மையே வந்து தாக்கும் என்பதனை உணரவேண்டும் அரசாங்கத்திடம் பிரச்னைகள் இல்லையாயின் நம்மிடமுள்ள பிரச்னைகளும் தீர்ந்து விடும்.

சமூகம் என்பது என்ன? நாம் யார்? அரசாங்கம் எது என்பன போன்றனவற்றைச் சரியாக அறிந்து கொள்ளவில்லை. நாம் யார் என்பது நமக்குத் தெரியும். சமூகம் என்பதனைப்பற்றி இன்னும் தெளிவாகக் கூறப்படவில்லை. நாம் எல்லா இடங்களிலும் பிரதிபலித்தால் அது சமூகமாகிவிடும். அரசாங்கமும் மக்களும் ஒன்று பிரஜைகளின் நலனைக் கவனிப்பதே அரசாங்கம்.

மனிதன் பிறந்ததுதொட்டு இறக்கும்வரை பிரச்னைகள் இருந்து கொண்டேயிருக்கும். மனிதன் சுயநல வாதியாகவே இருக்கிருன். ஆசிரியர்கள் சுயநலத்திற்கு எதிராக தியாகமுள்ளவர்களாக இருப்பதோடு மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும் இருக்கவேண்டும் ஆசிரியர்கள் பிரச்னைகளுக்கு முதலிடம் கொடுக்கக் கூடாது. பிரச்னைகளுக்கு முக்கியமளிக்காவிடின் அவை தாளுகவே தீர்ந்துவிடும்.

தேசியக் கல்விக் கமிஷன் ஆசிரியர்களை சொந்த இடங்களில் கடமையாற்றுவது பற்றிக் குறிப்பிட்டுள்ளதனை ஆசிரியர் கவனிப்பதோடு நிதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

வித்தியாதிகாரி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் பேசுகையில் ஆசிரியர்கள் வேற்றுமைகளைப் பாராட்டாது கடமையுணர்ச்சியுடன் செயலாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

திரு. வ. மகாலிங்கமும் பேசினுர். திரு. செ. கந்தையா நன்றி கூறினுர்.

## ஆஸ்பத்திரி கட்டடங்கள் பாவிக்கப்படாமலிருக்கின்றன

### சுகாதார இலாகா அறிவிப்பு

பொரளை, புதன்

கடந்த இரண்டு வருட காலத்திற்குள் மாகாணங்களில் கட்டப்பட்ட பல ஆஸ்பத்திரிகள் சுகாதார இலாகாவினுல் பாவிக்கப்படாமலிருக்கிறது. இந்த ஆஸ்பத்திரிகள் பாவிக்கப்படாததற்குக் காரணம், உத்தியோகஸ்தர்கள் குறைவாலும், தளபாடங்கள் இல்லாததாலும் தான் என்று சுகாதார இலாகா தெரிவித்துள்ளது.

இப்படியான கட்டிடங்கள் கூடிய விரைவில் பாவிக்கப்படுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகிறது. இவற்றுள் சில கட்டிடங்களுக்கு இதுவரை மின்சார, தண்ணீர் வடிகால்வாய் வசதிகள் செய்யப்படவில்லை. பாவிக்கப்படாத கட்டிடங்கள், யாழ்ப்பாணம், அனுராதபுரம், வெலிமடை, பலபிட்டிய, மட்டக்களப்பு, கண்டி, மாதம்பை ஆகிய இடங்களில் இருக்கிறது. ஆஸ்பத்திரி கட்டில்களை அனுப்பும்படி அரசாங்க தொழிற்சாலைகளைக் கேட்டிருந்தபோதும், பல ஆஸ்பத்திரிகளில் புதிய 'வார்ட்'டுகளுக்கு கட்டில்கள் போதியளவு காணுமலிருக்கிறது. புதிதாகக் கட்டபட்டுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு தளபாடங்கள், போடுவதற்கு சுகாதார இலாகாவிற்கு அதிகமான பணஉதவி தேவைப்படுகிறது. ஆனல் இந்த வேண்டுகோள் திறைசேரியினுல் தொடர்ந்து எதிர்க்கப்பட்டுவருகிறது.

சில மாகாண ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைநிலையம், வார்ட், சத்திரசிகிச்சை நிலையம் உட்பட, பல கட்டிடங்கள் திருத்தப்படவேண்டிய நிலைமையிருக்கிறது. சில கட்டிடங்கள் திரும்பவும் கட்டவேண்டிய நிலையிலிருக்கிறது. தொடர்ந்து பாவிக்கப்படாத கட்டிடங்களும், கவனிக்கப்படாமல் விடப்பட்ட கட்டிடங்களும் பழுதுபார்க்கப்பட வேண்டுமேன்று, சுகாதார இலாகா தெரிவித்துள்ளது.

மேலதிக கட்டிடங்களுக்கும் சுகாதார நிலையங்களுக்கும் மாகாண, பட்டின, கிராம அடிப்படையில் ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்துவதற்கும, 1962-63 லும், 1963-64 லும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக சுகாதார இலாகாவின் ஆண்டு அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வேலைகள் முழுவதையும் சுகாதார இலாகா, பொது வேலைப்பகுதியிடம் ஒப்படைத்தது. ஆனல் குறித்த தவணையில் பொது வேலைப்பகுதி இந்த வேலைகளைச் செய்து முடிக்கவில்லை என்றும் சுகாதார இலாகா தெரிவித்துள்ளது.


அரசியல் தலையீடு காரணமாகவும், சுகாதார இலாகா வேலைகள் தடைபடுகிறது. சில அரசியல்வாதிகள் தங்கள் தொகுதியிலுள்ள ஆஸ்பத்திரிகளில் நடைபெறும் வேலைகளை எதிர்த்து, அவர்கள் தீர்மானித்தபடி, கட்டிடங்கள் அமையவேண்டுமெனக் கருதுகிருர்கள்.

## ஏற்றுமதி அதிகம்

புதுடில்லி, ஏப்ரல் 24

பாரதத்தின் ஏற்றுமதி வர்த்தகம் முந்திய ஆண்டுகளைவிட 33½ கோடி அதிகரித்துள்ளது

# மங்கையர் ★ உலகம்



## மஞ்சளும் குங்குமமும்

—"சக்தி"—

**பெண்ணுக்கு நிறைவைக் கொடுப்பது மஞ்சளும் குங்குமமும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இவை சாதாரணபார்ப்பதற்கு அழகு சாதனங்களாக இருந்தபோதிலும் பெண்மைக்கு உண்மையிலேயே அழகையும் பெருமையையும் ஏன், மதிப்பையும் கொடுப்பது இவை எனலாம்.**

ஒரு பெண் சுமங்கலியா இல்லையா என்புதைப் பார்த்தவுடனேயே புரியவைப்பவை இவையே. வெற்று நெற்றியுடன் பெண் இருந்தால் அவள் மங்கலகருமங்களில் பங்கு கொள்ளத் தகுதியில்லாதவள் என விலக்கப்படுவாள்.

பழங்காலத்துத் தமிழ்ப் பெண்கள் முக்கியமாக கன்னிப்பெண்கள் பச்சை மஞ்சள் தேய்த்துக் குளிப்பது வழக்கம். இப்போதுள்ளது போல் சோப்பு உபயோகத்தில் இருக்கவில்லை. மஞ்சள் தேய்த்துக் குளித்தபின் அவர்களது முகம் அதிபிரகாசமாக மிளிரும். அத்துடன் மஞ்சள் தேய்த்துக் குளிப்பதுதான் மங்களகரமான செயலாகக் கருதப்பட்டு வந்தது. சுமங்கலிகள் யாவரும் மஞ்சள் பூசியே குளிப்பார்கள் பூ, மஞ்சள், குங்குமம் அணியாத சுமங்கலிகளே இருந்ததில்லை. இளம் பெண் தொடக்கம் குடுகுடு கிழவி வரை மஞ்சள் பூச்சும், குங்குமம் துலங்கும் நெற்றியும் பூ, வைத்த தலையுமாகவே காட்சியளிப்பார்கள். இந்த மங்களச் சின்னங்களே சுமங்கலியை அமங்கலியிலிருந்து பிரித்துக் காட்டிவந்தன.

### சிக்கனமானது

இப்பொழுது நம்நாட்டுப் பெண்கள் மஞ்சள் பூசிக்குளிப்பதை அநாகரிகமாகக் கருதுகிறார்கள். விதவிதமான சோப்புகளையே உபயோகித்து வருகின்றனர். மஞ்சளுக்கும் சோப்புக்கும் உள்ள வித்தியாசம் பலாபலன்கள் நன்றாகத்தெரிந்தும் மஞ்சள்பூச முன்வருவதில்லை. மஞ்சள் நாள்தவறாது பூசிக் குளித்தால் பலவகையான கிரீம்கள் முகப்பருவுக்கென உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. பணத்தை வீண்விரயம் செய்ய வேண்டிய அவசியமில்லை. 10 சதம் பெறுமதியான மஞ்சள்எத்தனையோ நாட்களுக்கு உபயோகிக்கப் போதுமே.

சிறிதுகாலம் குங்குமம் உபயோகிப்பது அருகி வந்தது. ஆனால் இப்பொழுது நாகரிகம் என்ற பெயரில் குங்குமம் இட்டுக் கொள்கிறார்கள். சிலர் அதிகமாகச் சாந்துப்பொட்டுக்களையும் பலநிறங்களில் சேலையின் நிறத்துக்குப் பொருத்தமான நிறங்களில் குங்குமம் இடுகிறார்கள். மங்களச் சின்னமாகிய சிகப்புநிற குங்குமம் இடுவதுதான் முறை. இஷ்டத்திற்கேற்ற நிறங்களில் இடுவது மங்களகரமானதாகக் கணிக்க முடியாது.

### பூவைக்கும் வழக்கம்

நம்நாட்டிலுள்ள பெண்கள் கல்யாணங்களுக்கு செல்லும் போதுமட்டும் பூ வைத்துக் கொண்டு செல்கிறார்கள். மற்றும்படி பூவையே நாடுவதில்லை. யாராவது சிலர் கோயிலுக்குப்போகும்பொழுது வைத்துக் செல்கிறார்கள். மங்களப் பொருளான இவற்றை நாம் நல்ல கருமங்களுக்குச் செல்லும் சமயங்களிலெல்லாம் வைத்துச் செல்லலாம்.

மஞ்சள், குங்குமம், பூ அணியும் பெண்கள் இந்த மஞ்சள், குங்குமம், பூ விஷயத்தில் மிகவும் அக்கறையுள்ளவர்களாகவே இருந்து வருகிறார்கள். தாம் இறக்கும்வரை இவற்றுடனேயே இறக்க வேண்டுமென பிரார்த்தனை செய்கிறார்கள். அதாவது சுமங்கலியாகவே இறக்க வேண்டுமென்பது அவர்களது இதயக்கோரிக்கை

---

## நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்

—வாசுகி—

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்பது' அறிஞர் ஒருவரின் அமுத மொழி. ஆம், பல கலைகளைப் பயிற்றுவிக்கும் ஒரு இடம்தான் குடும்பம் நடத்தும் இடம்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் பெற்றோர்கள்தான். பிள்ளைகள் தான் மாணவர்கள்.

பல்கலைக்கழகம் உயர்ந்த அறிவை மட்டும் கொடுத்து பட்டப் படிப்பு முடிந்ததும் மாணவனை வெளியே அனுப்பி விடுகிறது. ஆனால் குடும்ப பல்கலைக்கழகம் அப்படியல்ல. வாழ்வு முற்றிலும் ஒன்றோடு ஒன்று தொடர்புகொண்டு பிணைந்து நிற்கிறது.

குடும்ப அங்கத்தவர் ஒருவரின் வளமும், வளர்ச்சியும் கண்டு பூரிக்கிறது. வீழ்ச்சியும் தோல்வியும் கண்டு வேதனைப்படுகிறது.

பல்கலைக்கழகத்தின் பொறுப்பு ஒன்று இரண்டாக இருக்கும். ஆனால் குடும்பத்தின் பொறுப்போ ஒன்று இரண்டல்ல எண்ணிலடங்காதவை.

குடும்பத்தை பல்கலைக் கழகத்துக்கு ஒப்பிட்டதற்கு ஒரே ஒரு நோக்கம் இதுவாக இருக்கலாம். பேராசிரியர் எவ்விதம் தன்னை உயர்ந்த நிலையில் வைத்து கட்டுப்பாட்டின் கீழ் பயில வைத்து பயிற்சி கொடுக்கிறாரோ அவ்விதம் பெற்றோரும் தமது பிள்ளைகளைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து உயர்ந்த மனிதர்களாக்குவதற்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்பதை உணர்த்துவதற்கே எனலாம்.

பெற்றோரில் சிலர் ஏதோ பிள்ளைகளைப் பெற்றுவிட்டோம்; அவர்கள் தங்கள் பாட்டில் 'வளர்ந்துவிடுவார்கள் என்று அக்கறையின்மையாக நடந்துகொள்கின்றார்கள். இவ்வித மனப்பான்மை அவர்களது குழந்தைகளுக்கு எவ்வளவு கேடு விளைவிப்பதாக இருக்குமென அவர்கள் எண்ணிப்பார்த்ததில்லை.

பெற்றோர் தமது பிள்ளைகள் தமக்கு மட்டுமின்றி ஊருக்கும் உலகுக்கும் நல்லவர்களாக இருக்கவேண்டுமென்பதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

'தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுவரை, என்ற கருத்து செறிந்த பழமொழி குடும்பத்தின் உயர்ந்த இடத்தை எடுத்துக்காட்டுகிறது.

ஒரு பிள்ளை வீட்டில் எதை ஆரம்பத்தில் பழகிக்கொள்கிறதோ அதுதான் அதன் வாழ்வில் பின்னரும் ஊறி நிற்கிறது.

எனவே பிள்ளைகள் வீட்டில் நல்ல பழக்கங்களைப் பழகிக் கொள்ள வழியமைப்பது - வாய்ப்பளிப்பது பெற்றோரின் கடமை. அந்தப் பெற்றோர் அல்லும்பகலும் தமது குழந்தைகளின் சீரான வாழ்வு, செம்மை நிறைந்த வாழ்வுக்குச் செப்பனிட்டுக் கொண்டிருக்கவேண்டும்.

தொட்டிலில் இருக்கும் குழந்தையை நல்ல மனிதனாக உருவாக்கும் உயர்ந்த பொறுப்பு தம்முடையது என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து சகல நற்கலைகளையும் போதித்து நல்ல கட்டுப்பாட்டுடன் தமது பிள்ளைகளை வளர்க்க முயற்சி செய்ய வேண்டும்.

இவ்விதம் அக்கறை கொண்டு குழந்தைகளைப் பேணிவளர்க்கும் ஒரு குடும்பம் உண்மையில் ஒரு சிறந்த பல்கலைக்கழகம் என்றே கூறலாம்.

---

## குடித்தனப் பெண் வேண்டும்

ஜெர்மனியர்கள் குடித்தனப் பாங்கான மனைவிகளையே பெற விரும்புகின்றனர். பவேரியாவில் அபிப்பிராய சேகரிப்புத் தகவலிலிருந்து இவ்விஷயம் வெளிப்பட்டது. 23 சதவிகித ஆண்கள் தங்கள் மனைவி குடித்தனப் பாங்காக இருப்பதையே விரும்புகின்றனர். 25 சதவிகிதத்தினர் தங்கள் மனைவிகள் சம்பாதித்து உதவுபவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். ஸ்திரீகளில் 37 சதவிகிதத்தினரே குடும்பப்பாங்காக இருக்கவிரும்புகின்றனர். 44 சதவிகிதத்தினர் சுயேச்சையாக வேலைசெய்ய விரும்புகின்றதுடன் தங்கள் கணவன்மார்களுக்கு உதவியாகப் பணம் சம்பாதிக்க விரும்புவதாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். மேற்கு ஜெர்மனியில் பெண்களைவிட ஆண்கள் பழைய நோக்கங்களில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கின்றனர்.

---

சமையல் பகுதி

## கோழி குர்மா

—சகு—

### தேவையானபொருள்கள்

- 1 கோழி
- ½ இரு. பெரிய வெங்காயம்
- ¼ இரு. சின்ன வெங்காயம்
- ½ சுண்டு நெய்
- 2 சுண்டு கட்டித் தேங்காய்ப் பால்
- 2 சுண்டு தண்ணீர்த்தேங்காய்ப்பால்
- 10 பச்சை மிளகாய்
- 10 முந்திரிப் பருப்பு
- 1 எலிமிச்சம் பழம்
- 2 மேசைக்கரண்டி மிளகாய் தூள்
- 4 மேசைக்கரண்டி மல்லித் தூள்
- 1 தேக்கரண்டி மஞ்சள் தூள்
- ½ தேக்கரண்டி ஏலக்காய்த் தூள்
- 3 மேசைக் கரண்டி தோல் நீக்கிய பொரிகடலை
- கறிவேப்பிலை, உப்பு.

### செய்யும் முறை:

முதலில் கோழியை நன்றாகச் சுத்தம்செய்து, அளவான துண்டுகளாக வெட்டி, ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் கொஞ்சம் நறுக்கிய வெங்காயம், கறிவேப்பிலையும் போட்டு 1 சுண்டு தண்ணீர் பாலுடன் 3 சுண்டு தண்ணீரையும் விட்டு கோழி இறைச்சியை வேகவிடவும்.

கோழி இறைச்சி வெந்தவுடன், இறைச்சியை மட்டும்தனியாக எடுத்துவைத்துக் கொண்டுஇறைச்சி வெந்த நீரில் நறுக்கிவைத்த சின்ன, பெரிய வெங்காயம், பச்சைமிளகாய், கொத்த மல்லித்தூள், மஞ்சள் தூள், மிளகாய்த்தூள்' ஏலக்காய்த்தூள், கறிவேப்பிலை ஆகிய எல்லாவற்றையும் போட்டுக் கலக்கி குழம்பாக்கவும்.

பின்ஒருபெரியபாத்திரத்தில் நெய்யை ஊற்றி கொதிக்க விடவும். நெய் கொதித்தவுடன் கூட்டிவைத்திருக்கும் குழம்பை அந்த நெய்ப் பாத்திரத்தில் கொட்டவும்.

பொரிகடலையையும், முந்திரிப்பருப்பையும் சேர்த்து அம்மியில் நன்றாக அரைத்து, அதை முதலில் எடுத்துவைத்த கட்டித் தேங்காய்ப்பாலில் கரைத்து எலுமிச்சம் புளியையும் விட்டு கொதிக்கும் குழம்பில் ஊற்றவும். இப்பொழுது அளவாக உப்பையும் குழம்பில் சேர்த்துக்கொள்ளளாம்.

சிறிது நேரத்தில் குழம்பு கட்டியாகிக்கொண்டுவரும். அப்பொழுது முன்னமே எடுத்துவைத்திருந்த கோழி இறைச்சித் துண்டுகளைக் கறியில் போட்டுக் கிளறவேண்டும்.

சுமார் 10 நிமிடத்தில் கறி நன்றாகப் பிரண்டுவரும். அச்சமையம்பார்த்து கறியை அடிப்பிடிக்காவண்ணம் இறக்கி விடவேண்டும். இந்தக் கோழி குர்மா புரியாணி அல்லது நெய்ச்சோறு ஆகியவற்றுடன் சாப்பிட சுவையாக இருக்கும்.

### குறிப்பு

கொத்தமல்லி சேர்த்து இடித்திருக்கும் மிளாகாய்த்தூளை இதற்குப் பாவித்தால் மல்லித்தூள் என தனிமையாக இடித்து இக்கறியில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை.

---

## பதில் இல்லை!

—கனகம்—

அவளைப் பார்க்கவே எனக்குப் பரிதாபகரமாக இருந்தது.

அழகு, அடக்கம் எல்லாம் இருக்கிறது ஆனல்?...

எத்தனையோ இளைஞர்கள், அவளை முன்பின் தெரியாத இளைஞர்கள்-அவளைப் பார்ப்பதும் தமது காலர்களை சற்று உயர்த்தி விடுவதுமாக இருந்தார்கள். கைக்குட்டையை எடுத்து வியர்வை வழிந்து கொண்டிருந்த முகத்தைத் துடைத்துக் கொண்டு அலங்காரப்படுத்தியவர்கள் சிலர்; தலை செம்மையாக வாரப்பட்டிருக்கிறதா என்று ஒருமுறை இடது கையாலும் மறுமுறை வலது கையாலும் தலையைத் தடவிக் கொண்டவர்கள் சிலர். தாம்தான் அழகுஎன்று அங்கு வந்து சேர்ந்தவர்கள் எல்லோரும் அந்த நம்பிக்கையைக் கைவிட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது அவர்களின் முகத்திலிருந்து தெரியவந்தது.

தான் வந்திருக்கும் இடம் ஆஸ்பத்திரி என்பதை அவள் தான் பூரணமாக உணர்ந்திருந்தாளோ என்னவோ போடப்பட்ட வாங்கிலின் ஓர் ஓரத்தில் அமர்ந்து கொண்டு தான் வந்த கருமம் எப்பொழுது முடியும் என்ற எதிர்பார்ப்போடு இருந்துகொண்டிருந்தாள்.

அவளுக்குப் பக்கத்தில் இரண்டு மூன்று திருமணமாகாத யுவதிகள் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த இளைஞரின் பார்வையைத் தம்பக்கத்திலிழுக்க தமது பேச்சுக்குரலை உயர்த்திக் கொண்டிருந்தார்கள். அந்தப் பேச்சுகளில் இடையிடையே அவர்களது பெருமையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனல் ஓரத்திலிருந்தவள் மட்டும் ஒன்றுமே பேசவில்லை.

நான் அவளைப் பார்த்தேன். வீணை வாதங்களுக்கும் அற்ப பெருமைகளுக்கும் பெயர் போன இந்த உலகத்தில் அவளும் ஒருத்தி இருக்கிறாளே என்ற நினைவில்தான் பார்த்தேன்.

'நீயும் பார்க்கத் தொடங்கிவிட்டாயா' என்ற குரல் என்னை பக்கத்திலிருந்த பரந்தாமனைப் பார்க்கத் தூண்டியது. ஏதோ அர்த்தத்தோடு அவளைப் பார்த்துக் கொண்டு கருமத்தை மறந்திருந்தவர்களுள்எனது தற்காலிக நண்பன் பரந்தாமனும் ஒருவன்.

அர்ச்சனனுக்கு அடுத்தது தான் என்ற அசையாத நம்பிக்கை வைத்திருந்தான்எனது தற்காலிக நண்பன்.

'அது எப்பவோ தீர்மானமாகிவிட்டது.'

அரைவாசியிலிருந்து கதையை ஆரம்பித்தான்.

'எது?'

மணவறைப் பெண்போல் குனிந்தான். பின் என் அருகில் நெருங்கிவந்தான். காதோடு காதாக அவனது எண்ணத்தை-தீர்மானத்தைத் தெரிவித்தான்.

'அவளுக்கு வாழ்வளிக்க எண்ணிய உன்னை வாழ்த்துகிறேன். உன்னைப்போல் தியாகிகள் தோன்றிவிட்டால்பெண் இனத்தின் கஷ்டமெல்லாமே தீர்ந்துவிடும்' வாயில் வந்த வாழ்த்தைக் கூறினேன்.

பெருமிதம் கொண்டான் பரந்தாமன். அத்துடன் சலீம், அம்பிகாபதி, தேவதாஸ் இவர்களைக் கூட நினைவூட்டினன். அவனது பேச்சு உணர்ச்சிவசப்பட்டதனல் மருந்தெடுக்க வந்தவர்கள் ஆஸ்பத்திரி போர்டை ஒருமுறை சென்று பார்வையிட்டு பின் வந்து இருந்தார்கள்.

டாக்டர் எல்லோரையும் பார்த்துவிட்டார். ஆனல் பரந்தாமனின் பார்வை அவளை விட்டு நீங்கினபாடில்லை.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறுமுன் அவனது தியாகத்தை மீண்டும் பாராட்டும்

(7-ம் பக்கம்பார்க்க)

# 'லெனின்' இல்லம் இவ்வருட சாம்பியனாக தெரிவு

## சனசமூக, நெசவுநிலைய உடல் விருத்திப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண சனசமுகநிலைய 11-வது ஆண்டு நிறைவு விழாவும் பாரதி ஐக்கிய நெசவு நிலைய 7-வது ஆண்டு நிறைவு விழாவும் ஸ்ரீ நா. ச. ச. நிலைய புதுவிளையாட்டரங்கில் ஏழு தினங்களாக நடைபெற்றன. உடல்விருத்திப் போட்டிகளில் காந்திஇல்லம், லெனின் இல்லம், பாரதிஇல்லம் ஆகியவை கலந்துகொண்டன. லெனின் இல்லம்158½ புள்ளிகளைபெற்று இவ்வருடச் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. விளையாட்டு வீரர்களுக்கு திருமதி ஏ. வி ஏ.தேவநாயகம்பரிசுகள் வழங்கினர்.

விளையாட்டுப்போட்டி முடிவுகள் சில வருமாறு:-

### நீளம் பாய்தல்

பாலர் பிரிவு: அ. பாலசிங்கம், சி. முத்துத்தம்பி, சி. வாமதேவன்.

கீழ்ப் பிரிவு: வ. சுப்பிரமணியம், க. கந்தசாமி, வ பரஞ்சோதி.

மத்திய பிரிவு: செ. விசுவலிங்கம், இ. இராசலிங்கம், மு. அருளம்பலம்.

மே-பிரிவு: க. கதிரேசு, ஐ. பரமநாதன், இ. இராமையா.

உயர் மேற்பிரிவு: செ. இராசையா, நா. கனகையா, நா. சங்கரப்பிள்ளை.

### நின்று பாய்தல்

மத்திய பிரிவு: நா. கிருஷ்ணபிள்ளை, மு. அருளம்பலம், செ. விசுவலிங்கம்

மேற்பிரிவு: ஐ. நல்லையா, இ. இராமையா, ஐ. பரமநாதன்.

உயர் மேற்பிரிவு: ஐ. வைரமுத்து, செ. இராசையா, நா. கனகையா.

### உயரம் பாய்தல்

பாலர் பிரிவு: அ. பாலசிங்கம், சு. சண்முகநாதன், க. பத்மநாதன்.

கீழ்ப் பிரிவு: வ. சுப்பிரமணியம், வ. பரஞ்சோதி, அ. அருளம்பலம்.

மத்திய பிரிவி: செ. விசுவலிங்கம், நா. கிருஷ்ணபிள்ளை, வீ. தங்கராசா.

மேற்பிரிவு: க. கதிரேசு, ஐ. நல்லையா, இ. இராமையா,

உ. மே. பி: ஐ. வைரமுத்து, வ. கோபாலசிங்கம், சி. முருகேசு.

### தடியூன்றிப் பாய்தல்

கீழ்ப பிரிவு: வ. சுப்பிரமணியம், வ. பரஞ்சோதி, க. கந்தசாமி.

மத்திய பிரிவு: செ. விசுவலிங்கம், நா. கிருஷ்ணபிள்ளை, அ நாகலிங்கம்.

மேற்பிரிவு: ஐ.நல்லையா, க. கதிரேசு.

உ. மே. பிரிவு: நா. கனகையா.

### கெந்திப் பாய்தல்

கீழ்ப் பிரிவு: வ. பரஞ்சோதி, க. கந்தசாமி, வ. சுப்பிரமணியம்.

மத்திய பிரிவு: இ. இராசலிங்கம், செ. விசுவலிங்கம், மு. அருளம்பலம்.

மேற்பிரிவு. க. கதிரேசு, ஐ. நல்லையா, இ. இராமையா.

உ. மே. பிரிவு: செ. இராசையா, ஐ. வைரமுத்து.

### 50 யார் ஓட்டம்

பாலர் பிரிவு (பெண்கள்): அ. நல்லம்மா, வ. கமலாதேவி, ஐ. தவமணிதேவி.

### 75 யார் ஓட்டம்

பாலர் பிரிவு (பெண்கள்): அ. நல்லம்மா, வ. கமலாதேவி, ஐ. தவமணிதேவி.

கீழ்ப்பிரிவு (பெண்கள்): சி. தவமணி, வ. கமலாதேவி, ஐ. தவமணிதேவி.

பாலர் பிரிவு (ஆண்கள்): அ. பாலசிங்கம், அ. கதிரேசு, சி முத்துத்தம்பி.

### 100 யார் ஓட்டம்

கீழ்ப்பிரிவு (பெண்கள்): சி. தவமணி, அ. தவமணி, செ. தில்லையம்மா.

பாலர் பிரிவு (ஆண்கள்): சி. முத்துத்தம்பி, அ. கதிரேசு, சி. வாமதேவன்.

கீழ்ப் பிரிவு (ஆண்கள்): க. கந்தசாமி, வ. பரஞ்சோதி, அ. அருளம்பலம்.

மத்திய பிரிவு: இ. இராசலிங்கம், நா. கிருஷ்ணபிள்ளை, செ. நடராசா.

மேற் பிரிவு: ஐ. பரமநாதன், இ. ராமையா, க. ஐயம்பிள்ளை, ச செல்வத்துரை.

உ. மே. பிரிவு: செ. இராசையா, நா. கனகையா, நா. சங்கரப்பிள்ளை.

### 220 யார் ஓட்டம்

கீழ்ப்பிரிவு. வ. சுப்பிரமணியம், க. கந்தசாமி, அ. அருளம்பலம்.

மத்திய பிரிவு: இ. இராசலிங்கம், நா. கிருஷ்ணபிள்ளை, மு. அருளம்பலம்.

மேற்பிரிவு: ஐ. பரமநாதன், ஐ. நல்லையா, க ஐயம்பிள்ளை.

உ. மே. பிரிவு: செ. இராசையா, நா. சங்கரப்பிள்ளை, ஐ. வைரமுத்து.

### குண்டெறிதல்

மத்திய பிரிவு: இ. இராசலிங்கம், செ. நடராசா, மு. அருளம்பலம்.

மேற்பிரிவு: க. கதிரேசு, ச. செல்லத்துரை, க. பரமநாதன்.

உ. மே. பிரிவு: பொ. இரத்தினம், நா. இராசையா, மு. வைத்திலிங்கம்.

### விநோத உடைப்போட்டி

க. நல்லதம்பி கருவாட்டுக்காரர். ப. வீரம் அப்பாவி, பிச்சைக்காரன். சி. ஐயம்பிள்ளை குருட்டுப் பிச்சைக்காரன். விநோத உடைப்போட்டியில் பாரதி இல்லத்துக்குத்தான் மூன்று இடமும் கிடைத்தன.

### சங்கீதக் கதிரை

பெண்கள்: க. பேரின்பவதி,

ஆண்கள்: மு. சுப்பிரமணியம்.

### நெசவுப் போட்டி

பெண்கள்: செ. சரஸ்வதி, செ. ஜெகராச தில்லையம்மா, சு. வள்ளிப்பிள்ளை.

### தையல் போட்டி

மேற்பிரிவு (பெண்கள்): செ. சரஸ்வதி, ந. சுசீலா, இ. நல்லம்மா.

கீழ்ப்பிரிவு (பெண்கள்): மு. சந்திரவதி, மா. சற்குணவதி, சி. தவமணி.

பின்வருவோர் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:பாரதி பாலர் பிரிவு அ. நல்லம்மா 10 புள்ளிகள். லெனின் கீழ்ப் பிரிவு சி. தவமணி 10 புள்ளிகள். லெனின் பாலர் பிரிவு அ. பாலசிங்கம் 15 புள்ளிகள். காந்தி கீழ்ப்பிரிவு வ. சுப்பிரமணியம் 21 புள்ளிகள். பாரதி மத்திய பிரிவு இ. இராசலிங்கம் 23 புள்ளிகள். காந்தி மேற்பிரிவு க. கதிரரேசு 23 புள்ளிகள். பாரதி உ. மே பிரிவு செ. இராசையா 23 புள்ளிகள்.

லெனின் இல்லம் இவ்வருடச் சாம்பியனாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளது. லெனின் 158½ புள்ளிகள். பாரதி 139½ புள்ளிகள். காந்தி 133 புள்ளிகள்.

---

## மலைநாட்டில் அதிக பாதைகள்

கொழும்பு, புதன்

பொது மராமரத்து வேலைப் பகுதி மலைநாட்டில் அதிகமான பாதைகளைப் போடுவதில் ஈடுபட்டுள்ளது.

பதுளை, துவரேலியா பகுதிகளில் தான் இப் பாதைகள் ஏற்படுத்தப்படும்.

## 'முழு ஆதரவு தருகிறோம்'

கொழும்பு, புதன்

கல்லோயா சபையை மூடும் நடவடிக்கையை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் ஓர் தீர்மானம் கொண்டுவர உத்தேசித்திருப்பதையிட்டு எங்கள் சபை மிகவும் மகிழ்ச்சி அடைவதோடு இதனை வெற்றியடையச் செய்வதில் எங்கள் முழு ஆதரவையும் தருகிறோம் என்று கல்லோயா உத்தியோகஸ்தர் சபைத்தலைவர் திரு. எஸ். செல்லப்பா எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்காவிற்கு தந்தி மூலம் அறிவித்துள்ளார்.

---

## பதில் இல்லை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கத்துடன் உன்னைப் போன்ற ஒருவாலிபன் ஒரு வாய்பேசாத பெண்ணை மணமுடிக்க முன்வந்தது குறித்து நான் உண்மையில் ஆனந்தப் படுகிறேன் என்றேன்.

சொல்லிய வாய் மூடவில்லை தேவதாசுடன் தன்னை ஒப்பிட்ட பரந்தாமன் தெருவில் என்னையும் அந்தப் பெண்ணையும் திரும்பிப் பார்க்காமல் வேகமாகச் சென்று கொண்டிருந்தான்.

# வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 25-4-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசுஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7-00 பி. தியாகராஜா ஐயர் — பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 'மனோரஞ்சிதம் - 12' — தொடர்நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 9-30 குரல் வகை, 10 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி


(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள். 7-35 திருவாரூர் எஸ். சேதுராமன் — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 டி. கே. தங்கமணி — பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 திருவாரூர் எஸ். சேதுராமன் — பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 டி. ஜி. ஆனந்த சுப்பிரமணியன் பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி— முடிகொண்டான் வேங்கடராமய்யர் — பாட்டு, 8-40 திரைப்படஇசை, 9-15 சுபத்தசங்கீதம், 9-30 அகிலபாரதஇசை நாடகநிகழ்ச்சி.



# 'சர்வாதிகார ஆட்சியே இங்கு நடைபெறுகிறது'

## தேரோவின் கருத்துகுறித்து சாவகச்சேரி எம். பி.

யாழ்ப்பாணம், வியாழன்

**"பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தற்போது நடத்திவருவது சர்வாதிகார ஆட்சியே. மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்ட பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இனிஒருபோதும் மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வர முடியாது" எனத் தமிழரசுக்கட்சிப் பிரமுகரும் சாவகச்சேரி எம். பி. யு.மான திரு. வி. என். நவரத்தினம் 'ஈழநாடு' நிருபக்களித்த பேட்டியொன்றில் கூறினர். ஏதோ ஒரு சூழ்நிலையில் ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவோ அரசாங்கம், தொடர்ந்து ஆட்சிபீடத்திலிருக்க வேண்டுமானல் சர்வாதிகார முறையையே கையாள வேண்டும் என்பதனை அது உணர்ந்திருப்பதாகவும் திரு. நவரத்தினம் மேலும் கூறினர்.**

இலங்கையின் தற்போதைய நெருக்கடிகளைத் தீர்த்துக் கொள்வதற்கு பிரதமரின் தனிப்பட்ட சர்வாதிகார ஆட்சியே உகந்தது என அரசியலில் முக்கிய இடப்பெற்றுள்ள வண. ஹென்பிட்ட கெதர ஞானசீக தேரோ தெரிவித்த கருத்துப்பற்றி அபிப்பிராயம் கேட்டபோதே சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. நவரத்தினம் மேலும் இதுபற்றிக் குறிப்பிட்டதாவது: "இப்போது பிரதமரின் சர்வாதிகார ஆட்சியே நடைபெற்றுக்கொண்டு இருப்பதால் எதிர் காலத்தில் சர்வாதிகார ஆட்சி ஏற்படவேண்டிய அவசியமில்லை. மக்களின்விருப்பப்படி ஆட்சிசெய்வதே ஜனநாயகமாகும். இந்த அரசாங்கம் மக்களின் நம்பிக்கையையிழந்துவிட்டது. அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்குவரமுடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். எனவேதான் அவர்கள் தனிப்பட்ட சர்வாதிகார ஆட்சியை ஆரம்பித்துவிட்டார்கள்."

ஹென்பிட்டகெதர ஞானசீக தேரோவின் கருத்துக்களைக் குறித்து டாக்டர் என். எம். பெரேரா அபிப்பிராயம் தெரிவிக்கையில் அரசியல்பற்றி ஞானசீகதேரோ இன்னும் நன்ருக விளங்கிக் கொள்ளவில்லையென்றும் அரசியலில் நன்கு ஈடுபடாத அவர் அதில் சேர்வது அபாயமென்றும் கூறினர்.

சர்வாதிகாரமான எந்த ஆட்சியையும் லங்கா சமசமாஜக்கட்சி எதிர்த்துத்தான் வந்திருக்கிறது. எதிர்காலத்திலும் அப்படியேதான் நடந்து கொள்ளும். பௌத்த வட்டாரங்களில் நல்ல செல்வாக்கைப்

(5-ம் பக்கம் பார்க்க)

## வெள்ளத்துக்கு 180 பேர் பலி!

காபுல், ஏப்ரல் 24

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளப் பெருக்கின் காரண மாக, நூற்றுக்கணக்கானேர் உயிரிழந்திருப்பதாயும், 180 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

## அஸாம் புயல்

அஸாம், ஏப்ரல் 24

அஸாமில் கடந்த வாரத்தில் ஏற்பட்ட கடுமையான புயலினல் மொத்தம் 106 பேர் இறந்தனர் என்றும் ஏராளமானவர்கள் வீடுகள் இழந்து தவிக்கின்றனர். என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. புயலினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமான உதவிசெய்ய எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க

ஹிந்தி பேசாத மக்கள்

## "விரும்பும்வரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும்" -நேரு

## "அரசியல் சாஸனத்தை திருத்த வேண்டும்"

—சென்னை அறிஞர்கள்

சென்னை, ஏப்ரல் 24

ஆங்கிலத்தை அரசாங்க மொழியாக்குவது சம்பந்தமாக பிரதமர் நேரு அளித்துள்ள உறுதி மொழியைக் காக்கும் பொருட்டு அரசியல் சாஸனம் திருத்தப்படவேண்டும் என்றும், இதை ஒத்திவைப்பதால் பலனில்லை என்றும், தேசிய ஒருமைப்பாட்டுக்கு அவ்வாறு செய்வது அவசியம் என்றும், சென்னை மக்கள் சார்பாக இங்கு நடைபெற்ற யூனியன் மொழிமகாநாட்டுக்கு தலைமை வகித்துப் பேசிய டாக்டர் ஸி, பி. ராமஸ்வாமி ஐயர் குறிப்பிட்டார்.

மகாநாடு, இதைவலியுறுத்தும் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியது.

மகாநாட்டில் ராஜாஜி பேசும்போது, ஹிந்திபேசாத மக்கள் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என விரும்புகிருர்கள் எனக் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் இன்று நடைபெற்ற டில்லி லோகசபைக் கூட்டத்தில் பிரதமர் நேரு பேசியபோது, ஹிந்தி பேசாத மக்களின் சம்மதமின்றி அரசாங்க மொழியில் எவ்வித மாறுதலும் செய்யப்பட மாட்டாது என, மீண்டும் உறுதியளித்தார்.

"ஹிந்தி பேசாத மக்களின் சம்மதமின்றி அரசாங்க அலுவல்களில் பெரிய மாறுதல் எதுவும் செய்யப்படமாட்டாது. 1965-ம் ஆண்டுக்குப் பின்பும் காலவரையரையின்றி ஆங்கிலம் நீடித்திருக்க "உத்தியோக மொழிகள் மசோதா" வழி செய்கிறது" என நேரு கூறினர்.

"ஆங்கிலம் மூலம் மக்களிடையே விழிப்போ, தேசிய உணர்ச்சியோ ஏற்படாது. வங்காளி, தமிழ் ஆகியன ஹிந்தியைப்போலவே தேசிய மொழிகளாகும். கடந்த 15 ஆண்டுகளில் இந்தியாவின் 14 தேசிய மொழிகளும் உலகில் வேறெந்த மொழியையும் விட வளர்ச்சியடைந்திருக்கின்றன.

அரசாங்க உபயோகத்தால் மட்டும் ஒரு மொழி வளர்ச்சி பெற்று விடாது. ஆங்கிலம் இன்னும்பல காலம் இந்தியாவில் இருக்கும் என நம்புகிறேன்" என்றும் பிரதமர் கூறினர்.

"இந்திய மொழிகளில் ஒன்று மற்றென்றைவிட அதிக முக்கியமான தேசிய மொழி எனக் கருதமுடியாது. மற்ற மொழிகளை விட ஹிந்தி உயர்வான தல்ல. ஆனல் ஒரு இணைப்பு மொழியாக அது இன்னும் வளர வேண்டியிருக்கிறது. அதுவரை ஆங்கிலம் இருக்கும்.

10 வருடங்களுக்குப் பின் அரசாங்க மொழி பற்றிய பார்லிமெண்ட் கமிட்டியின் அறிக்கை, எல்லாராஜ்யஅரசாங்கங்களுக்கும் அனுப்பப்படும். ஆயினும் அரசாங்க மொழி விஷயத்தில் ஹிந்தி பேசாத மக்களை கட்டாயப்படுத்தும் எண்ணம் கிடையாது" என்றும் திரு. நேரு தொடர்ந்து கூறினர்,

தி. மு. க. அங்கத்தினர் திரு. மனேகரன் பேசுகையில், ஆட்சி மொழி பூராவும் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என்றும் அவசியமானல் அரசியல் சாஸனத்தைத் திருத்த வேண்டும் என்றும் கூறினர். "பிரதமரின் உறுதி மொழியை சாஸனத்தில் அல்லது, மசோதாவில் சேர்க்க வேண்டும். தி. மு. கழகம், ஹிந்தியை எதிர்க்கவில்லை. ஆனல் கட்டாய திணிப்பையே எதிர்க்கிறோம்" என்றும் திரு. மனேகரன் கூறினர்.

விவாதம் நாளை தொடர்ந்து நடைபெறும்.

## இளவரசி அலெக்ஸாண்ட்ரியா திருமணம்

லண்டன், ஏப்ரல் 24

இன்று வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் நடைபெற்ற அலெக்ஸாண்ட்ரியா இளவரசியின் திருமணத்தை கோடிக்கணக்கான மேற்கு ஐரோப்பிய மக்கள் கண்டுகளித்தனர். 7 ராணிகள், 2 இளவரசர்கள் உட்பட 2000 பேர் விவாகச் சடங்கில் பங்குபற்றினர். 60 டெலிவிஷன் காமராக்கள் இயங்கின. பாரிஸ் ஹோட்டல்களில் ஆயிரக்கணக்கானேர் விவாகத்தைக் கண்ணுற்றனர். காமன் வெல்த் நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் ஒலிப்பதிவுகளும், திரைப்படங்களும் அனுப்பப்பட்டன. திருமணத்திற்குப் பின் தம்பதிகள் தங்கள் தேன்மதியைக் கழிக்கும் பொருட்டு, ஸ்காட்லாந்துக்குப் பயணமாயினர்.

## படகுச் சேவை

கொழும்பு, புதன்

முதூருக்கும் திருக்கோணமலைக்குமிடையில் கூட்டுறவு மோட்டார் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பார்லிமெண்டில்

## அரசாங்க, எதிர்க்கட்சிக்கு சம பல பிரதிநிதித்துவம்

கொழும்பு, புதன்

பார்லிமெண்டில் 6 நியமன அங்கத்தினர்களையும் 4 தமிழ் பேசும் சுயேச்சை அங்கத்தினர்களையும் தவிர்த்து அரசாங்க அங்கத்தினர்களும் எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் தலா 73 பேர் இருக்கின்றனர்.

4 தமிழ்ப பேசும் சுயேச்சை அங்கத்தினர்களும் எல்லாக் கட்டங்களிலும் அரசாங்கத்தை ஆதரித்தே வாக்களித்திருக்கிருர்கள். திருவாளர்கள் அல்பிரட் துரையப்பா, ஏ. எல். ஏ. மஜீத் (நிந்தாவூர்), எம், ஏ. மஜீத் (பொத்துவில்), எம். ஸி. அஹமத் (கல்முனை) ஆகியோரே அவர்கள்.

முன்னுள் சுதந்திரக்கட்சி அங்கத்தினர்கள் மூவர் எதிர் கட்சியில் இருக்கின்றனர். தெனியாயை எம். பி. திரு. சுமனபாலதஹநாயகா, இரத்தினபுரி எம். பி. திரு. டி. ஆர். பி. வீரசேகரா, முன்னுள் உதவி நீதிமந்திரி திரு. அசோகா கருணுரத்ன ஆகியோரே இவர்கள்.

யு. என். பி. யைச் சேர்ந்த திரு. பி. டி. எஸ். குலரத்ன சமீபத்தில் சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார்.

பார்லிமெண்டில் இப்போது ஒன்றுபட்ட எதிர்க்கட்சிகளின் நிலை வருமாறு.

யு. என். பி. 29, சமசமாஜக் கட்சி 12, சமஷ்டிக் கட்சி 15, கம்யூனிஸ் 4, மக்கள் ஐக்கிய முன்னனி 3, ஜாதிக விமுக்திபெரமுனை 3, லங்கா பிரஜதந்திரகட்சி (திரு. தஹநாயகா) 1, திரு. ஆர். ஜி. சேனநாயகா, டாக்டர் டபிள்யு. டி. டி. சில்வா, திரு. டி. பி. ஆர். வீரசேகரா, திரு. அசோகா கருணுரத்ன, திரு. எம். சிவசிதம்பரம், திரு. டி. சிவசிதம்பரம்.

## அச்சுவேலி கி. ச. தேர்தல் முடிவு

யாழ்ப்பாணம், வியா

அச்சுவேலி கிராமசபைப் பொதுத்தேர்தல் செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமையும் நடைபெற்றது செவ்வாய்க் கிழமை, ஆறு வட்டாரங்களில் வாக்களிப்பு நடைபெற்றது. முதலாவது வட்டாரத்தில் திரு. எம். யோசேப், 4-ம் வட்டாரத்தில் திருவாளர்கள் கா. சின்னத்தம்பி, தம்பையா ஆகியோர் தமது கட்டுப்பணங்களையிழந்தனர்.

வெற்றியீட்டியவர்கள் விவரம் வருமாறு:

1-ம் வட்டாரம் திரு. வி. சிவலிங்கம், 4-ம் வட்டாரம் திரு. தி. கந்தசாமி, 10-ம் வட்டாரம் திரு. செ. சின்னக்குட்டி, 12-ம் வட்டாரம் திரு. தியாகராஜா செல்லப்பா, 13-ம் வட்டாரம் திரு. சவரிமுத்து ஜேக்கப், 14-ம் வட்டாரம் திரு. சுந்தரமூர்த்தி கனகசபாபதி.

5-ம் வட்டாரத்தில் திரு. சி. தாமோதரம் பிள்ளையும், 7-ம் வட்டாரத்தில் திரு. செ. கதிர்காமநாதனும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். 2-ம், 3-ம், 6-ம்' 8-ம், 9-ம், 11-ம் வட்டாரங்களுக்கு முறையே எம். சுப்பிரமணியம், கே. பொன்னம்பலம், க. சின்னத்தம்பி, சி. கார்த்திகேசு, வி. சின்னராசா, கே. பொன்னன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

எதிர்பாருங்கள்

ஆவலோடு எதிர்பார்த்த அதி உன்னத திரைவிருந்து!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல்
ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம்!

26-ந் திகதி வெள்ளிமுதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்)
மனேகரா (யாழ்ப்பாணம்) (ஜெமினி) (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு பேராட்டம்
★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை




சிவாஜி கணேசன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜா தேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா,
எம். வி. ராஜம்மா

— பி. எஸ். வி. பிக்சர்ஸ் —

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்
இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
சந்திரபாபு, எம். என். ராஜம்டி. எஸ். பாலையா,
கே. சூரியகலா, ரி. எஸ். துரைராஜ்
மற்றும் பலர் நடித்த
குமார ராஜா

மனேகரா
(யாழ்ப்பாணம்)
ஜூடி ஹோல்டன், எலன் டைனி
நடித்த
சொம்பீஸ் ஓப் த ஸ்டேட்டஸ்பியர்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 83-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.